www.padippakam.com



# புதிய ஜனநாயகம்

16—31 ஜனவரி '88

3-5

விலை ரூ: 1


ர்க்சிய-லெனினிய அரசியல் ஏடு


படிப்பகம்

www.padippakam.com

# இந்தியாவிலுள்ள சர்வதேச எதிர்புரட்சி இராணுவப்பள்ளி



ஐக்கிய நாடுகள் சபை, கூட்டு சேரா நாடுகள் மாநாடு, காமன் வெல்த் மாநாடு— இப்படி சர்வதேச அரங்கில் வாய்திறக்கும் போதெல்லாம் இந்திரா ராஜீவ் கும்பல் ஜனநாயகம், சுதந்திரம் பற்றி ஆரவாரத்துடன் பேசுகிறது. காலனியாதிக்கம், நிற— இன வெறி, ஏகாதிபத்தியம், பாசிசம் — சர்வாதிகாரத்தை எதிர்க்கும் நாயகனாக நடிக்கிறது. போலிக் கம்யூனிஸ்டுகளும் அங்கீகரிக்கப்பட்ட ஈழப்போராளி அமைப்புகளும் அதோடு சேர்ந்து கூட்டுப் பாடல் இசைக்கின்றன.

ஆனால் இந்திய அரசும் இந்திரா—ராஜீவ் கும்பலும் சர்வதேச எதிர் புரட்சியாளர்கள் என்பதற்கு மேலும் ஒரு சான்று! 1970 ஆம் ஆண்டிலிருந்து வடகிழக்கு இந்தியாவின் பரந்து விரிந்த ஏழு மலைத் தொடர்களை வளைத்துப் போட்டு ஒரு இரகசிய இராணுவப் பயிற்சிப்பள்ளி நடத்தப்படுகிறது. ''இந்திய ராணுவத்தின் கலக எதிர்ப்பு மற்றும் காடுகளில் யுத்த முறைப் பள்ளி'' என்பது அதன் பெயர். வடகிழக்கு இந்தியாவில் தேசிய இன விடுதலைக்காகப் போராடும் பல குழுக்களையும் ஒடுக்குவதற்கான பயிற்சியளிப்பதற்காக இந்தப் பள்ளி தொடங்கப்பட்டது. ஆனால் இந்தியாவின் நட்பு நாடுகளாக சொல்லப்படும் பூடான், இலங்கை, ஆஃப்கான், வங்கதேசம், கானா, ஈராக், கென்யா, மொரீஷியஸ், சிங்கப்பூர் மற்றும் ஆஃபிரிக்கா— போட்ஸ்வானா ஆகிய நாட்டு இராணுவத்தினருக்கும் இங்கு பயிற்சியளிக்கப்படுகிறது.

உலகின் பல்வேறு நாடுகளிலும் பாசிச சர்வாதிகார ஆட்சிக்கும், ஏகாதிபத்திய அடிவருடிகளுக்கும் எதிராக சுதந்திரம், ஜனநாயகம், தேசிய இனவிடுதலைக்காக ஆயுதப் போராட்டங்கள் நடக்கின்றன. அடக்கி ஒடுக்கப்பட்ட மக்களின் ஆதரவு மற்றும் சொந்தப் பிரதேசத்தின் அமைப்பு, முக்கியமாக, காடுகள் மலைகளை இந்தப் போராளிகள் தமக்குச் சாதமாகக் கொண்டுள்ளனர். பலவீனமான சிறிய போராளி அமைப்புகள் கூட இந்த இரு சாதகமான அம்சங்களைக் கொண்டுதான் பலம் வாய்ந்த ஆளும் வர்க்கத்தின் பெரிய இராணுவத்தை எதிர்த்துப் போராடி, பெருமளவு இழப்புகளை ஏற்படுத்துகின்றனர்.

எனவே நயந்து பழகியும், சலுகைகளை வாரி இறைத்தும் உள்ளூர் மக்களை ஈர்த்துக் கொள்ளவும் போராளிகளைத் தனிமைப்படுத்தவும்வேண்டும்; போராளிகள் முக்கியமாகப் போரிடும் காடுகள் மலைகளில் மரபுவழியில்லாத போர்புரியவும்வேண்டும். மறைந்திருந்து தாக்கி அழித்துவிட்டு மறைந்து போகும் கொரில்லாப் போர் முறையைப் போராளிகள் பின்பற்றுகின்றனர். மரபு வழியில் பயிற்றுவிக்கப்பட்ட ஆளும் வர்க்கக் கூலிப்படை இத்தாக்குதலை முறியடிக்கவேண்டும். இதற்கான ''மக்கள் தொடர்பு மற்றும் அதிரடிப் போர்ப்பயிற்சி'' அளிப்பது தான் இந்தப் பள்ளியின் நோக்கம். ''கலகப்படைகளை ஒடுக்குவதற்கு சாதாரணப் போர்ப் பயிற்சி மட்டும் போதாது; அது மனித உணர்வு சம்பந்தப்பட்ட பிரச்சினை. எனவே கலகப் போராளிகளைப் பிடித்து அவர்கள் மனதை மாற்றவும்; உள்ளூர் மக்களை ஈர்ப்பதற்காக உள்ளூர் நிலைமைகளைப் புரிந்து கொள்வதும்; அவர்களது கலாச்சார சமூக, பொருளாதாரபழக்க வழக்கங்களைக் கற்றுக் கொள்வதும் அவசியம். எனவே ஒவ்வொரு இராணுவ வீரனுக்கும் தனிநபர் போரிடும் திறமை, அவசரத்தில் விரைந்து ஆயுதங்களைப் பயன்படுத்துவது காடுகள் மலைகளில் போரிடுவது ஆகியவற்றோடு உள்ளூர் மொழி, சட்ட அம்சங்கள் மற்றும் சீர்திருத்தப் பணிகளில் பயிற்றுவிக்கப்படுகிறார்கள்.

இதற்காக ஐந்து வார குறுகிய பயிற்சி அளிக்கப்படுகிறது'' என்று இந்த இரகசிய இராணுவப் பயிற்சிப் பள்ளிக்கு பொதுநலச் சாயம் பூசுகிறார்கள் அதிகாரிகள்.

1970 லிருந்து 1881 அதிகாரிகளுக்கும், 8000 இளநிலை அதிகாரிகளுக்கும் 100 படை அணி வரிசைக்கும் இந்த ''கலக எதிர்ப்பு மற்றும்காடு—மலை போர் முறைப பள்ளி''யில் பயிற்சியளிக்கப்பட்டிருக்கிறது. பல வெளிநாட்டு இராணுவத்தினரும் இதில் அடங்குவர்.

மிஜோரத்தில் ''லால்டெங்கா'' துரோக ஒப்பந்தந்துக்குப் பின்னும், நாகா மற்றும் மணிப்பூரில் ஏராளமான படை குவிக்கப்பட்டு அன்றாட நிர்வாகத்தை இராணுவம் எடுத்துக் கொண்டும்கூட போராளிகளை ஒடுக்க முடியவில்லை என்பதே உண்மை. நாகா, மிஜோ, மணிப்பூர் மக்களுக்கெதிரானஇந்திய இராணுவ அட்டூழியங்களைப் பற்றிய செய்திகள் தொடர்ந்து வருகின்றன.

சுதந்திரம், ஜனநாயகம், மற்றும் விடுதலைக்காகப் போரிடும் போராளிகளை, எவ்வளவுதான் பயிற்சியளித்தாலும் கூலிப்படைகளால் ஒழித்துவிட முடியாது. இலங்கை பாசிச இராணுவத்துக்கு இஸ்ரேலிய, பாகிஸ்தானிய படைகளும் இங்கிலாந்தின் கூலிப் படைகளும் மட்டும் பயிற்சியளிக்கவில்லை. ஈழப்போராளிகளுக்கு ஆயுதங்களும் மற்றும் இராணுவப் பயிற்சியும் அளித்துக் கொண்டே, அவர்களை ஒடுக்குவதற்காகவும் ராஜீவ் கும்பல் பயிற்சியளித்து வந்திருக்கிறது; சர்வதேச எதிர்ப்புரட்சிஇராணுவ மையம் ஒன்று இந்தியாவில் இருக்கிறது ஆகிய உண்மைகள் இதனால் தெரிய வந்திருக்கிறது!


படிப்பகம்

www.padippakam.com

புதிய ஜனநாயகம்

மார்க்சிய—லெனினிய அரசியல் ஏடு

மூன்றாமாண்டு

5

16—31 ஜனவரி '88

தனி இதழ் : ரூ 1
ஆண்டு சந்தா : ரூ 24

# திடீர் விலையேற்றம்: ஈழப் போரின் நேரடி விளைவு!

வியட்நாம் போர் உலகிலேயே 'பணக்கார' நாடான அமெரிக்காவைப் பொருளாதார நெருக்கடியில் தள்ளியது என்றால் ஈழப் போர் நடத்தும் ஏழை நாடான இந்தியாவால் எப்படி இதை எதிர்கொள்ள முடியும்? ஈழப் போருக்கான ஒரு நாளைய செலவு மட்டும் 3 கோடி ரூபாய்! இதுவரை 600 கோடி ரூபாய் செலவாகியுள்ளதாக அதிகாரபூர்வ செய்தி கூறுகிறது. உண்மையில் 2000 கோடி ரூபாயையும் தாண்டிவிட்டது. இது ஒரு மாநில அரசின் பட்ஜெட் தொகையை விடவும் அதிகமானது. இத்தனை சுமையும் உழைக்கும் மக்கள் மீதே மீண்டும் சுமத்தப்படுகிறது. வங்கதேசப் போரைத் தொடர்ந்து வரிச் சுமைகள் ஏறியதைப் போலவே, இப்போதைய ஈழப் போரின் விளைவாக அரசே விலையேற்றம் செய்து இந்நாட்டு மக்கள்மீது இன்னுமொரு பொருளாதார தாக்குதலைக் கட்டவிழ்த்து விட்டுள்ளது.

கடந்த மூன்று வாரங்களில் அயோக்கியத்தனமான முறையில் பெட்ரோல், நிலக்கரி, தாவர எண்ணெய், இரும்பு—எஃகு, சிமெண்ட் முதலான பொருட்களை அடுத்தடுத்து விலையேற்றம் செய்துள்ளது பாசிச ராஜீவ் கும்பல். தன்னை ஆகப் பெரும்பான்மையாகத் தேர்ந்தெடுத்த மக்கள்மீது தொடர்ந்து நான்காவது ஆண்டும் பாசிச ராஜீவ் கும்பல் தொடுக்கும் பெரும் பொருளாதாரத் தாக்குதல் இது. நாடாளுமன்றத்தில் அடுத்த இரு மாதங்களில் சமர்ப்பிக்க வேண்டிய பட்ஜெட்டிற்கு முன்பே இந்த விலையேற்றத்தை அறிவித்துள்ளது. இதனால் பல கோடி ரூபாய் கொள்ளைக்கு வழிவகுத்துக் கொண்டு பட்ஜெட்டில் நியாயவானாக பரோபகாரியாக வேடம் போடுவதற்கு வழக்கம் போலவே முன்னேற்பாடுகளைச் செய்து கொண்டுள்ளது ராஜீவ் கும்பல்.

வாகனங்களின் எண்ணிக்கை பெருகிவிட்டதாம். இதனால் எரிபொருள் தேவை வருமாண்டில் அதிகரிக்குமாகும். எனவே இதைக் கட்டுப்படுத்தவும், கூடுதலான எரிபொருள் இறக்குமதிச் செலவைக் குறைக்கவும் 'தேசநலன்' கருதி லிட்டருக்கு ஒரு ரூபாய் வீதம் பெட்ரோல் விலையை உயர்த்தியுள்ளார்களாம்.

ஆனால் ஈழப் போரின் நேரடி விளைவாக முப்படைகளின் வாகனப் போக்குவரத்து அதிகரித்ததன் விளைவாக அதன் சுமை முழுவதையும் மக்கள் மீதே அப்பட்டமாகத் திணிக்கிறது பாசிச கும்பல். புதிய கச்சா எண்ணெய்க்கான மூலாதாரங்கள் இருந்தும், உலகச் சந்தையில் கச்சா எண்ணெய் விலை குறைந்தபோதும், இந்தியாவைவிட பின்தங்கிய நாடுகளில்கூட விலையேற்றம் இல்லாதபோதும், உலகிலேயே மிக அதிகமாக பெட்ரோல் விலையை ஏற்றிவிட்டு இதை 'தேசநலன்' என்று நியாயப்படுத்தவும் செய்கிறது. பெட்ரோல் விலையேற்றம் விரைவிலேயே போக்குவரத்துக் கட்டணங்களை மேலும் உயர்த்தும். இதுதவிர ரயில்வே கட்டணங்களை உயர்த்தப் போவதாக அச்சுறுத்திக் கொண்டிருக்கிறது ராஜீவ் கும்பல்.

முதலாளித்துவ பொருளாதார நிபுணர்களின் ஆய்வுப்படியே மிக விரைவில் இன்னும் கூடுதல் விலையேற்றமும் வரிச்சுமையும் காத்திருக்கிறது. பாசிசப் பிரதமரோ விலையேற்றத்தை கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் ஒரே அரசு தங்களுடையதுதான் என்று வெட்கமின்றி மார்தட்டிக் கொள்கிறார். வறட்சி, உணவுப் பற்றாக்குறை, கச்சாப் பொருட்கள் பற்றாக்குறை நீடித்த போதிலும்கூட விலைவாசி உயரவில்லை என்று புள்ளிவிபர சதவிகித கணக்கு காட்டி சதிராடுகிறார்.

ஆனால் பணவீக்கம் யானைக்காலாக பெருத்துக் கொண்டே போகிறது. 1986—87ல் மட்டும் 12 சதவீதம் உயர்ந்துள்ளதாக அரசே ஒப்புக் கொள்கிறது. அதிகாரபூர்வமற்ற ஆய்வுகள் 15 சதவீதத்திற்கு மேலாக உயர்ந்துள்ளதாககூறுகின்றன.

ஏழாவது ஐந்தாண்டு திட்டகாலத்தில் நிதிப் பற்றாக்குறை 14,400 கோடி ரூபாயைத் தாண்டக்கூடாது என்று கம்ப்யூட்டர் முறையில் திட்டமிட்டது ராஜீவ் கும்பல். ஆனால் திட்டமிட்டதைவிட கூடுதலாக ரூ 4000 கோடிக்கும் மேல் செலவாகிவிட்டது. அடுத்த இரு ஆண்டுகளில் மேலும் ரூ 6000 கோடி தேவைப்படுமாம். இதற்கான நிதி மூலாதாரங்களை எங்கே போய் திரட்டுவது என்று மண்டையைப் பிய்த்துக் கொள்கின்றனர் பாசிச கும்பலின் பொருளாதார நிபுணர்கள். மேலும் கூடுதலாக 8000 கோடிக்கு புதியவரிகள் விதித்து நிலைமையைச் சமாளிக்க முட்டாள்தனமாக முயலுகிறது பாசிச கும்பல்.

அக்டோபர் '87ல் முடியும் ஓராண்டுக்குள் வெங்காய விலை 300 சதவீதம் உயர்ந்துள்ளது. பருப்பு, சமையல் எண்ணெய் 70 சதவீதமும் சோப்புகள் 50 சதவீதமும் உயர்ந்துள்ளன. வரப்போகும் மாதங்களில் அனைத்து துறைகளிலும் குறைந்தது 250 சதவீதம் விலையேற்றம் என்பது தவிர்க்கவியலாதது என்று பொருளாதார நிபுணர்கள் மதிப்பிடுகின்றனர். ராணுவச் செலவு, அரசு செலவுகள், மானியங்களின் உயர்வு, அன்னிய கடனுக்கான கூடுதலான வட்டிச்சுமை ஆகியவை நெருக்கடியை மேலும் தீவிரமாக்குகிறது என்று ஏற்கனவே ரிசர்வ் வங்கி எச்சரித்த போதிலும், பாசிச ராஜீவ் கும்பலின் ஆட்சியில்

படைப்புகள் அனுப்பவும் மற்றும் அனைத்துத்தொடர்புக்கும்

எஸ். மதியழகன்
ஆசிரியர் 'புதிய ஜனநாயகம்'
21, பாலாஜிசிங் தெரு
சைதாப்பேட்டை
சென்னை—600 015.

படிப்பகம்

www.padippakam.com

ராணுவச் செலவு கிடுகிடுவென உயர்ந்து கொண்டே போகிறது. குறிப்பாக, ஈழப்போரின் விளைவாக 1984—85ல் 6661 கோடியாக இருந்த ராணுவச் செலவு 1987—88ல் 12,512 கோடியாகி விட்டது.

இந்த விலையேற்றத்துக்கும் பொருளாதாரப் பின்னடைவுக்கும் காரணமாக இருப்பது பாசிச ராஜீவ் கும்பலின் படுபிற்போக்கான கொள்கைகள் தாம்! ஏராளமான வரிச் சலுகைகள், தொழிற் சலுகைகள், நவீனமயமாக்குவதற்காக ஆட்குறைப்பு என்று தரகு அதிகார முதலாளிகளுக்கு சலுகைகள் கொடுத்தும் வளர்ச்சி விகிதம் உயரவில்லை. கறுப்புப் பணத்தை வெள்ளைப் பணமாக்குவது, பொருளாதார குற்றங்களுக்கு பொது மன்னிப்பு வழங்கியும் சேமிப்பு விகிதம் உயரவில்லை. ஏற்றுமதி அடிப்படையிலான உற்பத்திக்கு தாராள அனுமதி, வெளிநாடுகளில் வாழும் இந்தியருக்கு சிறப்பு சலுகை, இறக்குமதிக்கு கதவுகளைத் திறந்து விடுவது முதலான கொள்கைகளை அமுலாக்கியும் அந்நியச் செலாவணி உயரவில்லை. பொருளாதார குற்றவாளிகள்மீது சோதனை நாடகமாடியும்கூட, வெளிநாடுகளில் பணத்தைக் குவிப்பதிலேயே தரகு அதிகார முதலாளிகள் குறியாய் உள்ளனர்.

இத்தனைக்கும் மேலாக விஸ்தரிப்பு பேராசை பிடித்து ஈழத்தின் மீது நடத்திவரும் ஆக்கிரமிப்புப் போர், நெருக்கடியை மேலும் தீவிரமாக்கி விட்டுள்ளது. இதோடு

**அத்தியாசப் பொருட்களின் மொத்த விலை உயர்வு**

**அக் 86 — அக் 87 முடிய**

| பொருட்கள் | விலை உயர்வு (சதவிகிதத்தில்) |
|---|---|
| அரிசி | 13.5 |
| கோதுமை | 12.3 |
| உருளை | 40.2 |
| வெங்காயம் | 304.5 |
| பால் | 15.6 |
| இறைச்சி | 15.6 |
| டீ | 19.5 |
| மாவு | 21.6 |
| சர்க்கரை | 10.6 |
| வனஸ்பதி | 51.1 |
| கடலை எண்ணெய் | 70.3 |
| கடுகு எண்ணெய் | 115.5 |
| சோப் | 47.7 |

சார்க் மாநாடு, கலாச்சார விழா, ராஜீவின் உல்லாச— ஓய்வு பயணங்கள் என்று கோடி கோடியாக விரயம், அரசு ஊழியர்களின் பெயரைச் சொல்லிக் கொண்டு அதிகார வர்க்கம் கோடிக்கணக்கில் கொட்டிக் கொள்வது; இதனால் அரசு செலவினங்கள் அதிகரிப்பது —இப்படி பாசிச ராஜிவ் கும்பலின் கிரிமினல் குற்றங்களின் காரணமாகவே பொருளாதார நெருக்கடி முற்றுகிறது.

நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு உணவுப் பொருட்களின் தட்டுப்பாட்டைக் குறைக்க அன்னிய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்வது என்று முடிவெடுத்து, 2 லட்சம் டன் சர்க்கரையை



இறக்குமதி செய்தது அரசு. இதன் அடக்கவிலையோ ரூ 9. உள்நாட்டு சர்க்கரையோ ரூ 7க்கு விற்கப்படுகிறது. அரசுரூ 2 குறைத்துவிற்றால் நட்டமாகும் என்று உள்நாட்டு சர்க்கரைவிலையைரூ2உயர்த்திக்கொள்ள அரசே அனுமதித்துள்ளது. இந்த லட்சணத்தில் உள்நாட்டில் விலைவாசியை நிலைப்படுத்துவதற்காகத்தான் வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்கிறோம் என்கிறது அரசு.

விலைவாசி உயர்வானது எப்பேர்பட்ட ஆட்சியையும் மக்களிடமிருந்து தனிமைப்படுத்திவிடும் என்று ராஜீவின் எடுபிடி பத்திரிக்கைகளே பாசிச கும்பலை எச்சரித்து உடனடியாக மாற்றத்தைக் கோருகின்றன. ராஜீவ் அரசு பல்வேறு துறைகளிலும் தோல்வியடைந்து செயலற்ற அரசாகிவிட்டதே என்று அங்கலாய்க்கின்றன. விலையேற்றத்தை நியாயப்படுத்த முடியாமல் விழிபிதுங்கி நிற்கின்றன.

"நாட்டிலே ஒரு புரட்சி நடந்து கொண்டிருக்கிறது. பணக்காரர்களுக்கும் ஏழைகளுக்கும் இடையிலான பெரும் இடைவெளி குறைந்து வருகிறது" என்று சமீபத்தில் சேவாதள மாநாட்டில் பாசிசப் பிரதமர் ராஜீவ் பேசியதை வெறும் பிதற்றலாகக் கருதிவிட முடியாது. நடுத்தர வர்க்கத்தினரை வறியவர்களாக்குவது, வறியவர்களை ஒழித்துக் கட்டுவது என்ற திட்டத்தையே தெளிவாகக் கூறியுள்ளார். பாசிச இந்திரா தொடங்கி வைத்து அவர் வாரிசு ராஜீவ் அடியொற்றிப் பின்பற்றும் தேசத்தை முழுவதுமாக அடகு வைக்கும் புதிய பொருளாதாரக் கொள்கையும், பிராந்திய விஸ்தரிப்புக் கொள்கையும் ஏற்கனவே வறட்சியிலும் பஞ்சத்திலும் தவிக்கும் மக்களை பட்டினிச் சாவுக்குத் தள்ளிவிட்டுள்ளது. வருமாண்டுகளில் இதைத் தீவிரப்படுத்தி அப்பட்டமாக பாசிசத் தாக்குதலை கட்டவிழ்த்து விடுவதற்குபொருளாதார ரீதியிலான தயாரிப்பே இந்த விலையேற்றம்.

தேசிய நலன், தேச ஐக்கியம், ஈழத்தமிழரை காப்பது, என்கிற பெயரில் தேசிய வெறியூட்டி தன்னை நியாயப்படுத்திக் கொள்ள முயலுகிறது பாசிச கும்பல். நரியின் தர்க்கங்கள் ஆடுகளைக் காவு கொள்வதற்கானவையே. எனவே, பாசிச ராஜீவ் கும்பலுக்கு எதிராக புரட்சிகர அமைப்புகளில் மக்கள் திரண்டு இத்தகு பொருளாதார தாக்குதல்களை எதிர்த்து முறியடிக்க வேண்டும். விலையேற்றத்திற்கு எதிரான போராட்டங்களை ஈழ ஆக்கிரமிப்பு எதிர்ப்பு, பாசிச எதிர்ப்புப் போராட்டங்களோடு இணைக்க வேண்டும். ●

படிப்பகம்

www.padippakam.com

## ஆந்திரா:

# ஐ.ஏ.எஸ் அதிகாரிகள் கடத்தல்:

# அரசு பயங்கரவாதத்திற்கு பதிலடி

டிசம்பர் மாதம் 29ம்ஆம் தேதி காலைப் பத்திரிக்கைகள் அனைத்தும் ''ஐஏஎஸ் அதிகாரிகள் கடத்தல்: நக்சலைட்டுகள் அட்டூழியம்'' என பரபரப்பாக செய்திகளைத்தாங்கி வந்தன. மத்திய அரசு நிலைமையை சமாளிக்க உடனே ஆறு விமானங்களில் மத்திய 'ரிசர்வ்' படையினரையும் 100 அதிரடிப் படையினரையும் மாநில அரசுக்கு உதவியாக அனுப்பியது. ஆனால் மாநில அரசு திடீரென நக்சல்பாரிப் புரட்சியாளர்களின் கோரிக்கைகளை ஏற்று டிசம்பர் 29 காலையே கைதிகளை ஜாமீனில் விடுவித்து அதிகாரிகளை மீட்டுச் சென்றது.

பத்திரிக்கைகள் பரபரப்பூட்டிய இச்சம்பவத்தின் உண்மைதான் என்ன?

ஆந்திர மாநில சமூக நலத்துறையின் முதன்மைச் செயலர் எஸ்ஆர் சங்கரன். இவரை மத்திய அரசு ஐஏஎஸ் பயிற்சிப் பள்ளிக்கு டைரக்டராக மாற்றியது. அந்த மாற்றல் உத்தரவை ஏற்றுவிடுப்பில் வந்த சங்கரன் இறுதியாக ஆந்திர ஆதிவாசிகள் மத்தியில் நடந்த திட்டங்களைப் பற்றிஅறியமாநிலத்தின் பல பகுதிகளைச் சுற்றிப் பார்த்தார்.

கிழக்கு கோதாவரி மாவட்டத்திலுள்ள புலிமெட்லா கிராமத்திற்கு டிசம்பர் 27ஆம் தேதி சென்றபோது ஏழு உயர் அதிகாரிகளும் 25க்கு மேற்பட்ட உதவியாளர்களும் உடன் சென்றனர். புலிமெட்லா கிராமத்தில் ஆதிவாசிகளுடன் பேசி முடிக்கும்போது மாலைசுமார்4மணி. அங்கிருந்துராஜமுந்திரி நகரை நோக்கி ஜீப்புகளில் விரைந்தனர்.



புஷ்பா தம்பி, ரெட்டி சுப்ரமணியம்—கடத்தப்பட்ட கலெக்டர் தம்பதிகள்: விடுதலைக்குப் பின்.

மேடு பள்ளமான புழுதி பறக்கும் சாலையில் ஒரு கிலோ மீட்டர் வருவதற்குள் திடீரென ஜீப்புகள் குலுங்கி நின்றன. துப்பாக்கி ஏந்திய பத்து பேர் ஜீப்புகளைச் சூழ்ந்திருந்தனர். இதில் மூவர் பெண்கள்; ஏழு பேர் ஆண்கள்.

அவர்களின் உத்தரவின் பேரில் ஜீப்பில் இருந்த அனைவரும் சாலை ஓரத்தில்அமர்ந்தனர். அதில், அதிகாரிகள் யார் எனத் தாங்களாகவே அறிவிக்க வேண்டும் என்றனர். அறிமுகப்படுத்திக் கொண்ட எட்டு அதிகாரிகளையும் தனியே உட்கார உத்தரவிட்டனர். கட்டளைகளை பிறப்பித்துக் கொண்டிருந்தவர் தனது பெயர் கனகையா என்று அறிமுகப்படுத்திக் கொண்டார்.

தாங்கள் இந்தியப் பொதுவுடமைக் கட்சி (மார்க்சிஸ்ட்—லெனினிஸ்ட்) மக்கள் யுத்தக் குழுவின் கொரில்லா தளம் ஒன்றைச் சேர்ந்தவர்கள் எனக் கூறி சுருக்கமாக தமது கட்சியைப் பற்றிப் பேசினார்.

'இந்த அரசு நிலப்பிரபுக்களுக்கும் தரகு முதலாளிகளுக்கும் சேவை செய்து, பரந்துபட்ட மக்களை ஒட்டச் சுரண்டி அடக்கி ஒடுக்கி வருகிறது. அடக்கி ஒடுக்கி சுரண்டப்படும் மக்களுக்காகப் போராடும் புரட்சியாளர்களை போலீசு, இராணுவத்தை வைத்து நர வேட்டையாடுகிறது. புரட்சியாளர்களின் மீதான அடக்குமுறை அதிகரித்து, வரைமுறையின்றி பலரும் கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டு சித்திர வதைக்குள்ளாகின்றனர். இதற்கு எதிர்ப்புத் தெரிவிக்கவேஉங்களைப் பணயக் கைதிகளாகப் பிடித்துள்ளோம்' என்று கனகையா கூறினார்.

அதிகாரிகள் தவிர மற்றவர்கள் அருகில் உள்ள கோர்தெடு கிராம ஆசிரமப் பள்ளியில் தங்கவைக்கப்பட்டனர். 'யாரும் வெளியேற வேண்டாம். வெளியே சென்றால் நாங்கள்பொறுப்பல்ல' என்றுகூறப்பட்டதால் இறுதிவரை யாரும் வெளிவரத் துணியவில்லை. அவர்களுக்கு வேளாவேளைக்கு உணவும், உறங்குவதற்கு போர்வையும் தரப்பட்டன.

அதிகாரிகள் சாலையிலிருந்து நேரே காட்டிற்குள் கொண்டு செல்லப்பட்டனர். தாங்கள் கொண்டு வந்த கம்பளி போர்வை, மப்ளர் முதலியவற்றை அதிகாரிகள் எடுத்துக் கொண்டனர். இரண்டு பணியாளர்கள் (பியூன்கள்) அதிகாரிகளுடன் சென்றனர். இதற்கு கனகையா தடையேதும் சொல்லவில்லை.

அதிகாரிகளுடன் பேசிக் கொண்டே சென்ற கனகையா,''20 நாட்களுக்கு முன்பு எங்கள் தோழர்கள் பலரும்கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டனர்.ஆனால் அவர்கள் என்ன ஆனார்கள் எனத் தெரியாது. நீதிமன்றத்தில் மாஜிஸ்ட்ரேட் முன்புகூட ஆஜர் படுத்தப் படவில்லை. அவர்களை விடுவிக்கவே உங்கள் அனைவரையும் பிணை கைதிகளாக பிடித்திருக்கிறோம்'' என்று மேலும் விவரங்கள் தந்தார்.

''ராஜ முந்திரி சிறையிலடைக்கப்பட்டுள்ள புரட்சியாளர்கள் ஏழு பேரைக் குறிப்பிட்டு அவர்களை டிசம்பர் 29காலை 11 மணிக்குள் விடுவிக்க வேண்டும். இல்லையெனில் எங்கள்உயிருக்குஆபத்து'' என அதிகாரிகளிடம் எழுதி வாங்கி, அத்தகவலை பணியாளர்கள் மூலம் கொடுத்தனுப்புவது என கனகையா முடிவெடுத்தார்.

இணை கலெக்டர் ராதாவை அனுப்புவதே சிறப்பாயிருக்கும் என்ற அதிகாரிகளின் ஆலோசனையை கனகையா ஏற்றார். தவிர அதிகாரிகளில் புஷ்பா தம்பி என்ற ஒரே பெண் கலெக்டர்தான் இருந்ததால் அவரையும் கூட அனுப்பிவிட்டனர், புரட்சியாளர்கள். ராதா, புஷ்பா தம்பி இருவரும்

படிப்பகம்

www.padippakam.com

சென்றபின் மீண்டும் காட்டிற்குள் நடந்து மலையடிவாரத்தையடைந்து தங்கினர். சாப்பிட்டு விட்டு வெளிகளில் படுத்துறங்கினர்.

மறுநாள் அதிகாலை எழுந்து மேலும் இரண்டு மணி நேரம் காட்டிற்குள் நடந்தனர். பணியாளர்கள், அதிகாரிகளுக்கு காலை உணவு தயாரிக்கும்போது நக்சல்பாரிப் புரட்சியாளர்களும் தேவையான உதவிகள் செய்தனர்.

அன்று முழுவதும் அதிகாரிகளுடன் புரட்சியாளர்கள் சரளமாகப் பேசிக் கொண்டிருந்தனர். மக்கள் யுத்தக் குழுவின் 'கிரந்தி' கட்சிப் பத்திரிக்கைகளையும், கத்தர் பாடல் புத்தகமும் படிப்பதற்கு தரப்பட்டன. ஆதிவாசிகள் பிரச்சினையைப்பற்றி விவாதிக்கும் போது அரசின் திட்டங்களை எப்படி தவறானவை, தாங்கள் வைக்கும் புரட்சிகர தீர்வு எப்படி சரியானவை என புரட்சியாளர்கள் விளக்கினர். விடுதலைக்கு பின் வெளிவந்த அதிகாரி சங்கரன் "அந்த இளம் பெண்களும், இளைஞர்களும் ஆதிவாசிகளின் பிரச்சினைகளைப் பற்றி மிகத் தெளிந்த அறிவுடனும், மிகுந்த அக்கறையுடனும் இருந்தது உண்மையிலேயே என்னிடம் ஆழ்ந்த மதிப்பை ஏற்படுத்தியுள்ளது. இதை மறைக்க விரும்பவில்லை" என்றார். இன்னும் ஓர் அதிகாரி "அவர்கள் எல்லாவற்றையுமேதெரிந்து வைத்துள்ளனர்" என்று கூறினார்.

அதிகாரிகளின் இந்தப் பேட்டி போலீசாரின், பல பத்திரிக்கைகளின் பொய் மூட்டைகளை நொடியில் அவிழ்த்துஅம்பலப்படுத்தியது. பீதியூட்டும் வதந்திகளை தோலுரித்து காட்டியது.


● ●

டிசம்பர் 27ஆம்தேதி விடுவிக்கப்பட்ட இரு அதிகாரிகளும் ராஜமுந்திரி நகருக்கு விரைந்தனர். போலீசு சூப்பிரண்டெண்ட் டி.டி. நாயக்கிடம் இரவு 10மணிக்கு தகவல் தரப்பட்டது. அவர் போலீசு தலைமையகத்திற்கும், அரசுத் தலைமையத்திற்கும் உடனே செய்தியைத் தெரிவித்தார்.

தகவல் கிடைத்த இன்ஸ்பெக்டர் ஜெனரல் (சி.ஐ.டி) டோராவும் டைரக்டர் ஜெனரல் ராம்மோகன் ராவும்28ந்தேதிகாலை என்டிஆரை சந்தித்து நிலைமையைப் பரிசீலிக்கின்றனர். கைதிகளை விடுவிப்பது என முடிவெடுக்கிறார்கள்.

காலை 6.30மணி தெலுங்குச் செய்தியில் நக்சல்பாரிகள் விடுதலை பற்றிக் கூறி, ராஜ முந்திரி இணை கலெக்டர் காட்டினுள் உள்ள நக்சல்பாரிகளுடன் தொடர்பு கொள்ள முயன்று கொண்டுள்ள தகவலும் கூறப்பட்டது.





ஜாமீனில் விடுவிக்கப்பட்ட நக்சல்பாரிப் புரட்சியாளர்களை சுமந்துகொண்டு கோர்தெடு கிராமத்தை நோக்கி போலீசு ஜீப் விரைகிறது.

ராம்பசோடாவரம் போலீஸ் ஸ்டேஷன். அதிகாரிகளை விடுவிப்பதற்கான மையமாக பரபரப்புடன் செயல்படுகிறது.

விடுதலையான தோழர்கள் கோர்தெடு பள்ளிக்கு வந்தபின், அவர்கள்தானா என சோதிக்கப்படுகிறது. பின் காட்டினுள் தகவல் தரப்பட்டபின் இரவு 9.15 மணிக்கு விடுதலை செய்யப்பட்ட அதிகாரிகள் கோர்தெடு பள்ளிக்கு வந்தனர்.

போலீசு என்கிற சட்டபூர்வ ரௌடி கும்பல் சந்தேகத்தின் பேரில் யாரையாவது கைது செய்தால்கூட உண்மையை வரவழைப்பது என்ற பெயரில் அவர்கள் செய்யும் மிருகத்தனமான மூன்றாந்தர சித்திரவதைகளுடன் புரட்சியாளர்கள் அதிகாரிகளை நடத்திய விதத்தை ஒப்பிட்டுப் பார்த்தால் போலீசு செய்யும் அவதூறுப் பிரச்சாரத்தின் உள்நோக்கத்தை சிறு குழந்தைகூட புரிந்து கொள்ளும்.

அதிகாரிகள் கைதான விசயம் தெரிந்ததும் 600க்கும் மேற்பட்ட ஆதிவாசிகள் கட்செடு என்னுமிடத்தில் கூடினார்கள். அதிகாரிகளுக்கு ஏதாவது நடந்து விடுமோ எனப் பதறியல்ல. போலீசின் கொலை வெறித் தாக்குதலிலிருந்து தப்பிக்கும்தற்காப்புஎண்ணத்தில்தான் ஓரிடத்தில் குவிந்திருந்தனர்.

சங்கரன்



கொலைகார வெங்கலராவ் ஆட்சிக் காலத்திலிருந்து வழமையாக நடந்து வரும் நிகழ்ச்சிதான் புரட்சியாளர்களை ஒழிப்பது என்ற பெயரில் போலீசார் ஆதிவாசிகளின் சொற்ப வாழ்வையும் பறித்து காட்டுமிராண்டித்தன கொடூரங்களான கொலை, கொள்ளை, கற்பழிப்பு, சூறையாடல், தீ வைப்பு முதலியவற்றை நடத்துவது.

இதே டிஜி ராம்மோகன்ராவ் உத்தரவின் பேரில் செடபள்ளி கிராமத்தில் 1987 மே 2—3 தேதிகளில் 680 ஆதிவாசிகளின் வீடுகள் தீக்கிரையாக்கப்பட்டு அவர்கள் நரவேட்டையாடப்பட்டனர்.

போலீசார் நக்சல்பாரிப் புரட்சியாளர்களை நரவேட்டையாடுவதும், கொன்றபின் மோதல்நடந்தது என கதைகட்டுவதும்தொடர்கதை நிகழ்ச்சியாயிருக்கிறது. ஒருவரைக் கைது செய்தால் 24 மணிநேரத்திற்குள் மாஜிஸ்ட்ரேட் முன்பு ஒப்படைக்க வேண்டும். கைது செய்த புரட்சியாளர்களை அப்படி ஒப்படைக்காத ஒரே காரணத்தால் தான் அதிகாரிகள் கடத்தப்பட்ட சம்பவமே நடந்தது.

போலீசின் சட்டவிரோதச் செயலைக் கண்டிக்க முதுகெலும்பற்ற பத்திரிக்கைகளும் ஒட்டுப் பொறுக்கிகளும்தான் புரட்சியாளர்களைப் பற்றி அவதூறுசெய்து வருகின்றனர்.

ஜாமீனில் வந்த ஏழு பேரும், இன்னும் எட்டுப் பேரின் பெயர்களைக் குறிப்பிட்டு, விசாரணையின்றி சிறையிலிருக்கும் அவர்கள் விடுவிக்கப்பட வேண்டுமென பேட்டியளித்தனர்.

அரசு அதிகார கும்பலுக்கோ, புரட்சியாளர்களை போலீசு கும்பல் பிடித்து வைத்துள்ளதுகூட தெரியாதாம்! அவர்களைப் பற்றி விசாரித்து தகவல் சொல்வதாக நரித்தனத்தோடு பதிலளிக்கிறது.

□ மணி



படிப்பகம்

www.padippakam.com

## திருபாய் ஹிராசந்த் அம்பாணி

# குமாஸ்தா குபேரரான கதை!



திருபாய்ஹிராசந்த்அம்பாணி—1987 ஆம் ஆண்டு பத்திரிக்கைகளில் பரபரப்பாகவும், பிரபலமாகவும் பெயர் அடிபட்ட புள்ளிகளில் ஒருவர். ஆர்வத்தோடும், அக்கறையோடும், சற்று ஆழத்தோடும் பத்திரிக்கை படிப்பவர்களுக்கு, குறிப்பாக பேர் பாக்ஸ் விவகாரம் வெளியானபிறகு நன்கு தெரிந்திருக்கும் நபர். வழவழப்பான தாள்களில் வண்ண வண்ண உயர்ரக ஆடைகளில் அழகான ஆண்களும் பெண்களும் ‘விமல் மட்டுமே’ என்கிற விளம்பரம் தாங்கி பத்திரிக்கைகளில் வருமே, அந்த விமல் துணிகளை உற்பத்தி செய்யும் ரிலையன்ஸ் துணி ஆலைகளின் முதலாளி.

ராஜீவின் பினாமி அஜிதாப் பச்சன் மற்றும் ராஜீவின் நெருங்கிய நண்பர் லவித் மோகன் தபார் போன்றவர்களோடு, மிக முக்கியமாக இந்த திருபாய் அம்பாணியின் தொழில் விவகாரங்களை—இரகசியங்களைக் கண்டுபிடிப்பதற்காகத்தான் அமெரிக்க துப்பறியும் நிறுவனமான பேர் பேக்ஸ் அமர்த்தப்பட்டது. பேர் பாக்ஸ் விவகாரத்தைத் தொடர்ந்து, நாட்டின் தரகு அதிகார முதலாளிகளும், அவர்களின் அரசியல் பிரதிநிதிகளும் இரண்டு அணியாகப் பிரிந்து நீடித்த அரசியல் பொருளாதார யுத்தத்தில் இறங்கினர். இந்த யுத்தத்திற்கான மிகமிக முக்கியமான காரணங்களில் ஒன்று, கடந்த இருபதாண்டுகளில் திருபாய் ஹிராசந்த் அம்பாணிஅடைந்துள்ள இராட்சத வளர்ச்சியாகும்.

திருபாய் ஹிராசந்த் அம்பாணியின் அசுரத்தனமான வளர்ச்சி கண்டு இந்தியத் தரகு அதிகார முதலாளிகளில் ஒரு பிரிவினர் பிரமித்துப்போய் நிற்கின்றனர்; மற்றொரு பிரிவினரோ பொறாமையால் வெதும்பிப் போய் குதிக்கின்றனர். அரசியலில் எம்ஜிஆர்—என்டிஆர் பிரவேசித்து வெற்றியடைந்தது எப்படித் தொழில்முறை அரசியல் வாதிகளைக் கலக்கியதோ, அப்படித் திருபாய் ஹிராசந்த் அம்பாணியின் தொழில்—வியாபாரம் பிரவேசமும் எழுச்சியும், பரம்பரைத் தரகு அதிகார முதலாளிகளைக் கலக்கிவிட்டது. நாடாளுமன்ற அரசியலில் ஓட்டுப் பொறுக்குவதற்கு கவர்ச்சிகரமான அரசியலைத்தான் தொழில்முறை அரசியல்வாதிகள் கொண்டிருந்தனர் என்பதை எம்ஜிஆரும் என்டிஆரும் புரிந்து கொண்டு தனது சினிமா—தொழில் அனுபவத்துடன் அதைச் சாதித்தனர்.

அப்படித்தான் கூட்டுப் பங்குக் கம்பெனிகளில் மூலதனமிடும் நடுத்தர மற்றும் மேட்டுக் குடியினரிடம் தொழில்—கவர்ச்சி காட்டித்தான் பரம்பரைத் தரகு அதிகார முதலாளிகள் வளர்கின்றனர் என்பதைத் திருபாய் அம்பாணி புரிந்து கொண்டு தனது வியாபார—கவர்ச்சி அனுபவத்துடன் அதைச் சாதித்தார். நாடாளுமன்ற அரசியலையே கேலிக் கூத்தாக்கியதன் மூலம் அதன் புனிதத்துவ—ஜனநாயகப் போலித்தனங்களை எம்ஜிஆரும் என்டிஆரும் கிழித்தெறிந்தனர். அப்படித்தான் பொருளாதார சட்ட—நெறிமுறைகளைக் கேலிக் கூத்தாக்கியதன் மூலம் சோசலிச—சுயசார்புப் போலித்தனங்களை திருபாய் அம்பாணி கிழித்தெறிந்தார்.

சுருக்கமாகச் சொன்னால் இன்றைய நாடாளுமன்ற ஜனநாயகத்தின் நாயகர்கள் எம்ஜிஆர் என்டிஆர் என்றால், தரகு அதிகார முதலாளித்துவப் பொருளாதாரத்தின் நாயகர் திருபாய் ஹிராசந்த் அம்பாணி! எம்ஜிஆரையும்—என்டிஆரையும் முன்மாதிரியாகக் கொண்டு அரசியலில் வெற்றிபெற பல தொழில்முறை அரசியல்வாதிகள் முயல்வதைப் போலவே திருபாய் அம்பாணியை முன்மாதிரியாகக் கொண்டு முன்னேற பல முதலாளிகள் முயலுகிறார்கள்.

இத்தனைக்கும் திருபாய் ஹிராசந்த் அம்பாணி ஒரு கிராமப் பள்ளி ஆசிரியரின் மகன்தான்! பள்ளி இறுதிவரைதான் படித்திருக்கிறார். குஜராத்திலுள்ள ஜுனாகத் மாவட்டம் சோர்வாத் கிராமத்தில் பணியாசேத் இனத்தைச் சேர்ந்தவர். 17 வயதில் மாதம்300 ரூபாய் சம்பளத்தில் ஒரு பிரெஞ்சு எண்ணெய் கம்பெனியின் எழுத்தராகி அரபு நாட்டிலுள்ள ஏடன் நகருக்குப் போனார். பிறகு கம்பெனியின் சில்லறை விற்பனைக்குப் பொறுப்பாளராகி எத்யோப்பியா, சோமாலியா, கென்யா, உகாண்டா போன்ற ஆப்பிரிக்க நாடுகளில் 15 ஆண்டுகள் வேலை செய்தார்.

1960இல் சொந்தமாகத் தொழில் செய்வது என்று முடிவு செய்து 15000 ரூபாய் மட்டுமே மூலதனமிட்டு ரிலையன்ஸ் வர்த்தகக் கழகம் என்ற கம்பெனியைத் தொடங்கினார். பம்பாய் “பாத் பஜாரில்” ஒரு சிறு அறையில் மற்றொரு கம்பெனியுடன் சேர்ந்து இடம்பிடித்துக்கொண்டார். ஆரம்ப


படிப்பகம்

தில் இஞ்சி, ஏலம், புளி மற்றும் பிற சமையல் பொருட்களை அரபு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்தார். லாபம் கிடைத்தால் போதும் என் பதிலேயே குறியாக இருந்தார். ஒரு அராபிய ஷேக் ரோஜாத் தோட்டம் ஒன்று பயிரிட விரும்பியபோது, வளமான மண்ணை ஏற்றுமதி செய்தார் திருபாய் அம்பாணி! பிறகு துணி மற்றும் நூல்வியாபாரத்தில் இறங்கினார். குறிப்பாக இறக்குமதி செய்யப்பட்ட நூல் வியாபாரத்தில் ஈடுபட்டார். அந்நாளில் எப்படியாவது பணம் சேர்த்துவிட வேண்டும் என்கிற வெறியோடு ஒரு குஜராத்தி பணியாவுக்கே உரிய வியாபார வழிமுறைகளைப் பின்பற்றினார். கோடிக்கணக்கான ரூபாய் மூலதனமிடப்பட்டுள்ள ரிலையன்சின் ஆலைகள் அமெரிக்காவில் நிர்வாகத் துறையில் உயர் கல்வி பயின்ற அம்பாணியின் இரண்டு மகன்களால் நிர்வகிக்கப் படுகின்றன. ஆனால் அவர்கள் 1960களின் ஆரம்பத்தில் பம்பாயில் ஒரு சிறு அறை வீட்டில் பிறந்து, பம்பாய்த் தெருப்புழுதியில் விளையாடி வளர்ந்தவர்கள்!

1967இல் 15 லட்ச ரூபாய் மூலதனத்தில் ரிலையன்ஸ் துணி ஆலைகள் என்கிற கம்பெனியை நிறுவினார். அவ்வளவு நிதி அவரிடம் இல்லை. அம்பாணியின் கிராமத்துக்காரரும், ஜனதா கட்சி நிறுவனர்களில் ஒருவரும், ஜார்ஜ் பெர்ணாடசுடன் தலைமறைவாகி பரோடா வெடிகுண்டு வழக்கில் சிக்கியவரும், எம்.பியும், முகுந்து இரும்பு எஃகு ஆலை முதலாளியுமான விரேன் ஷாவிடம் 4 லட்சம் ரூபாய் கடன் கேட்டுப் போனார் அம்பாணி. "இந்தத் தொழில் போது" என்று சொல்லி அவர் மறுத்து விட்டார்.

10ஆண்டுகளுக்குப் பிறகு ரிலையன்ஸ் பொதுப் பங்கு கம்பெனியானது. அதாவது அம்பாணி குடும்பம் தவிர "பொது மக்களும்" வாங்குவதற்கு பங்குச் சந்தைக்கு வந்தது. பங்குச் சந்தையிலோ வாங்குவார் யாருமில்லை. ஒரு லட்ச ரூபாய்க்கு பங்குகள் வாங்கும்படி அரசு அதிகாரிகளிடம் மன்றாடினார்; அவர்களும் மறுத்துவிட்டனர்.


அப்பொழுது அம்பாணியின் தொழில்—வியாபாரத்தில் யாருக்கும் நம்பிக்கையில்லை. 1970—80ஆகிய 10 ஆண்டுகளில் ரயான், நைலான் நூல் மற்றும் துணி இறக்குமதி ஏற்றுமதியில் ஏராளமாகப் பணம் சேர்த்தார். அப்போது இந்தச் செயற்கையிழை நூல்—துணி வகைகளில் கடும் பற்றாக்குறை நிலவியது. இதைப் பயன்படுத்திக் கொண்டு இறக்குமதி லைசென்சுகளைக் குறிப்பிட்ட தொகை கொடுத்து விலைக்கு வாங்கினார். அவற்றைக் கொண்டு இறக்குமதி—ஏற்றுமதி வியாபாரத்தில் பெரும் அளவு ஈடுபட்டார். அம்பாணி கள்ளச்சந்தை நடத்துவதாக போட்டி முதலாளிகள் குற்றஞ்சாட்டினார்கள். பதிலடி கொடுக்க முடிவு செய்தார் அம்பாணி. அவரது




RELIANCE
TEXTILE
INDUSTRIES

நீண்டநாள் நண்பரும் பட்டு மற்றும் செயற்கைப் பட்டு ஆலைகளின் சங்கத் தலைவருமான ஷோராஃபை அனுப்பினார். செயற்கையிழைத் தொழிலில் உள்ள பெரும் முதலாளிகளின் கூட்டத்தைக் கூட்டச் செய்தார். "நான் கள்ளச் சந்தை நடத்துவதாகநீங்கள் குற்றஞ்சாட்டுகிறீர்கள்; ஆனால் உங்களில் யாரொருவர் என்னோடு படுக்காதவர்கள்?" என்று ஒரு போடு போட்டார். அவ்வளவுதான் எல்லா முதலாளிகளும் வாயடைத்துப் போனார்கள். ஏனெனில் அவர்கள் அவ்வளவுபேரும் ஏதாவது ஒரு சமயம் அம்பாணியிடம் நூல்—செயற்கையிழை வாங்கியவர்கள் அல்லது விற்றவர்கள். "அம்பாணியை விடப் புனிதமானவர்கள் யாரும் இல்லை" என்பதை அவர்களிடம் நிரூபித்தார். எல்லோரும் வாயடைத்துப் போனார்கள்.

25 ஆண்டுகளுக்கு முன்பு 15,000 ரூபாய் மட்டுமே மூலதனமிட்டு வியாபாரம் தொடங்கிய, 20 ஆண்டுகளுக்கு முன்பு 15 லட்சம் ரூபாய் மட்டுமே மூலதனமிட்டு 4 பழைய நெசவு இயந்திரங்களைக் கொண்டு ஆலைகள் தொடங்கிய திருபாய் ஹிராசந்த அம்பாணி 1985இல் 10,000 கோடி ரூபாய் பங்கு சந்தை மதிப்புடைய ரிலையன்ஸ் ஆலைகளுக்கு முதலாளி! அம்பாணியின் குடும்ப மூலதனம் மட்டும் 150கோடி ரூபாய்! பல பத்தாண்டுகள் தொழில்—வியாபாரம் நடத்திய,இந்தியாவிலேயே பெரிய தரகு அதிகார முதலாளியான டாடா நிறுவனத்தையும் விஞ்சிவிட்டார், சொத்து, வரி, லாபம் ஈட்டுவதில்! 1987இல் அரசுக்கு வரி மற்றும் தீர்வையாக மட்டும் 600 கோடிரூபாய் செலுத்துமளவு—பெரிய நிறுவனமாக ரிலையன்ஸ் வளர்ந்து விட்டது.



திருபாய் அம்பாணி, தனது வாரிசுகள் முகேஷ் மற்றும்அனில் அம்பாணிகளுடன்.



படிப்பகம்

www.padippakam.com

ரிலையன்ஸ் — அம்பாணியின் சாதனைகள் இந்தியக் கூட்டுப் பங்குக் கம்பெனிகளின் வரலாற்றில் ஒரு சூறாவளி என்று பொருளாதார நிபுணர்கள் வியப்போடு கூறுகிறார்கள். இன்று ரிலையன்ஸ் நிறுவனத்தில் பங்குதாரர்களின் எண்ணிக்கை 18 லட்சம். அமெரிக்காவுக்கு வெளியேயுள்ள 500 பெரிய கூட்டுப் பங்குக் கம்பெனிகளின் பட்டியலில் இடம் பெறும் முதலாவது இந்திய நிறுவனம் ரிலையன்ஸ். 12,000 பேர்கள் கலந்து கொண்ட அதன் பங்குதாரர் கூட்டத்தை நடத்தும் அளவு பம்பாயின் எந்த மண்டபமும் கிடையாது; எனவே ஒரு பெரிய கால்பந்தாட்ட மைதானத்தில் நடத்தப்பட்டது!

ரிலையன்ஸ் நிறுவனம் பல வகைகளில் முதலிடத்தைப் பிடித்து விட்டது! கடந்த ஆண்டு அதன் வியாபாரம் 1,400 கோடி ரூபாய்; அதன் மதிப்பு 550கோடி ரூபாய்; அதன் நிலையான சொத்து மதிப்பு 1,200 கோடி ரூபாய். வேறு எந்தத் துணிக் கம்பெனியையும் விட மிக அதிக அளவு லாபம் ஈட்டுவது- ரிலையன்ஸ. ஏற்கனவே வேறு எந்த போட்டி முதலாளியையும்விட அதிகமாக பாலியஸ்டர் நூலிழை (25000டன்கள்) உற்பத்தி செய்யும் ரிலையன்ஸ் விரைவில் அதை இரண்டு மடங்காக்கி விடும். பாலியஸ்டர் நூலிழை உற்பத்திக்குத் தேவையான கச்சா இராசாயனப் பொருட்களான சுத்திகரிக்கப்பட்ட டெரிஃப்தாலிக் அமிலம்(75000டன்கள்)மோனே எத்திலீன் கிளைகால் (40,000டன்கள்), லீனியர்ஆல்கைல் பென்ஜீன்(50,000 டன்கள்)உற்பத்தி செய்வதற்கான ஆலைநிர்மானிக்கப் பட்டுவிட்டது; ஏற்கனவே வேறு எந்தகம்பெனியையும் விட அதிகமாக 45,000டன்கள் பாலியஸ்டர் பஞ்சு உற்பத்தி செய்கிறது ரிலையன்ஸ். இந்த ஆலைகளை மிகக் குறுகிய காலத்தில் நிறுவி உலக சாதனை புரிந்துள்ளது.

மற்றெல்லா தனியார் துறை கூட்டுப் பங்குக் கம்பெனிகளையும் விட ஒவ்வொரு நாளும் அதிகமாக முதலீடு செய்கிறது ரிலையன்ஸ். அதாவது ஒரு நாளைக்கு ஒருகோடி ரூபாய் வீதம் கடந்த இரண்டாண்டுகளில் முதலீடுசெய்தது. நிகரலாபம் 29 சதவிகிதம் ஈட்டிய ரிலையன்ஸ் வேறெந்த கம்பெனியையும் விடக் கூடுதலான அளவு பங்குதாரர்களுக்கு லாப விகிதமளிக்கிறது. 1977இல் ஒரு பங்கு 1000 ரூபாய்க்கு என்று வாங்கியது, இப்போது சந்தை மதிப்பு 50,000 ரூபாய். இதுவரை செலுத்தப்பட்ட லாபம் மட்டுமே 1000 பங்கு ஒன்றுக்கு 4500 ரூபாய்! எனவே ரிலையன்ஸ்க்கு ஏராளமாகப் பங்குகள் குவிகின்றன; மதிப்பு ஏறுகிறது—முதலீடுக்குப் பஞ்சமே இல்லை. 1000 கோடி ரூபாய் மூலதனமிட இப்போதும் தயாராக உள்ளது.


20 ஆண்டுகளில் துணி-செயற்கையிழை உற்பத்தி-வியாபாரத்தில் ஏகபோக நிலைக்கு உயர்ந்த திருபாய் அம்பானி விரைவில் மிகப் பெரிய பெட்ரோலிய—இரசாயன ஏகபோகத்தையும் எட்ட இருக்கிறார். மதுரா எண்ணெய் சுத்திகரிப்பு ஆலையிலிருந்து கிடைக்கும் நாப்தாவைக் கொண்டு 500 கோடி முதலீட்டில் ஒரு வாசனை—இரசாயன ஆலை உருவாகிறது! இவற்றோடு அவர் திருப்தி அடையப் போவதில்லை. உணவு எண்ணெய் வித்துக்கள் பயிரிடும் பண்ணைகள், பெட்ரோலிய எண்ணெய் கண்டு பிடிப்பு, கம்ப்யூட்டர்கள் என்று "சாதகமான எல்லா திசைகளிலும் போவேன்" என்கிறார் அம்பாணி. ஏற்கனவே விளம்பரத் துறையில் மிகப் பெரிய முத்ரா விளம்பர நிறுவனம்; அதன் கிளையாக 4 கோடி ரூபாய் மூலதனமிட்டு வீடியோ சாதன உற்பத்தி மற்றும் வானொளி வீடியோ சினிமா உற்பத்தி என்று விரிவாகிக் கொண்டே போகிறது அம்பாணியின் தொழில் பேரரசு!

ஒரு சாதாரண கிராமப்பள்ளி ஆசிரியரின் மகன், பள்ளி இறுதி வகுப்பு வரை மட்டுமே படித்த சராசரி மாணவன், ஏழை எழுத்தர் இருபது ஆண்டுகளில் இவ்வளவு பிரம்மாண்டமாக வளர்ந்தது எப்படி சாத்தியமானது? அதுவும் இந்திரா—ஜனதா சோசலிசத்தின் கீழ்?

"திருபாய் ஹிராசந்த் அம்பாணி தொட்டதெல்லாம் துலங்கும்! கை பட்டதெல்லாம் பொன்னாகும்!" என்று முதலாளிகள் பலரும் புதிரான காரணம் சொல்லுகிறார்கள். அம்பாணியின் அதீத திறமைகள்- தனிச் சிறப்பான பலமாக சொல்லிக் கொள்வன— விற்பனையிலிருந்து நிதி விவகாரம் மற்றும் தொழில் நுட்பத் தெரிவு வரை ஒவ்வொன்றிலும் திறமையுடன் செயல்படுவது, துரித வேகத்தில் மலையாகப் பணம் குவியும் வர்த்தகத்தை அதுவும் கொள்ளை லாபம் கிடைக்கும் ஏற்றுமதி—இறக்குமதிப் பொருட்களின் வியாபாரத்தை தெரிவு செய்தது அம்பாணியின் ஆரம்பகால வெற்றிக்குக் காரணம். பிறகு அரசாங்கத்தைச் சரியாக அணுகியதும், உரிய தருணத்தில் உரிய தொழில் நுட்பத்தை தெரிவு செய்வதும் பிற்கால வெற்றிக்கு காரணம். அதாவது டி. எம். டி. என்ற இரசாயனக் கச்சாப் பொருள் கொண்டு பாலியஸ்டர் நூலிழைகள் உற்பத்தி செய்வதிலிருந்து மலிவான பி.டி.ஏ. இராசாயன கச்சாப் பொருளைக் கொண்டு உற்பத்தி செய்வதை நோக்கி உலகம் முழுவதும் மாறுவதை அம்பாணி புரிந்து கொண்டு தெரிவு செய்தார். அம்பாணியின் தொழில் எதிரியான நுஸ்லி வாடியா பழைய—காலாவதியாகும் டி. எம். டி. அடிப்படையிலான தொழில் நுட்பத்தைப் போய் வாங்கி வந்தார்.

செயற்கை இழை உற்பத்தி செய்யும் கம்பெனிகள் மொத்த விற்பனை சந்தைக்குப் போகும்போது அம்பாணி சில்லறை விற்பனையில் இறங்கினார்; நேரடியாக சிறு நெசவு முதலாளிகளுக்கு நூலைக் கொடுத்து, மலிவாகத் துணியை வாங்கி ரிலையன்சின் 'விமல்' முத்திரை குத்தி கொள்ளை லாபம் சம்பாதித்தார். இதனால் ரிலையன்சுக்குரிய லைசென்சு அளவை விட அதிகமாக துணி உற்பத்தி செய்து விற்றார்.

இப்படி அம்பாணியின் அலாதியான திறமைகள் பற்றி அடுக்குகிறார்கள் அவருடைய ஆட்கள். இருப்பினும் அம்பாணியின் திடீர்



www.padippakam.com

வளர்ச்சிக்குக் காரணம் அரசாங்க லைசென்சுகள் பெறுவதிலும், அரசாங்கத்தின் சுங்கத் தீர்வைகளைச் தனக்குச் சாதகமாக மாற்றுவதிலும் மேல்மட்ட நண்பர்களைப் பயன்படுத்தி எதிரிகளை வீழ்த்துகிறார் என்று இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு சந்தேகமிருந்தது.

1982இல் இறக்குமதி செய்யப்பட்ட டிஎம்டி என்ற இரசாயனக் கச்சாப் பொருள் கொண்டு பாலியஸ்டர் நூல் உற்பத்தியில் ரிலையன்ஸ் இறங்கியது. அதன் போட்டியாளரான ஆர்கே ஆலைகள் நிறுவனம் இறக்குமதி செய்த பாலியஸ்டர் துணிகளைப் பயன்படுத்தி வந்தது. உடனே பாலியஸ்டர் துகள்களின் இறக்குமதி தீர்வையை ஒரு தலைப்பட்சமாக அரசு ஏற்றியது. இதனால் ஆர்கே ஆலைகளின் வீழ்ச்சி—முடக்கம் காரணமாக ரிலையன்ஸ்பாதுகாப்பான சந்தையில் கொள்ளை லாபமடித்தது. பிறகு ரிலையன்ஸ் பாலியஸ்டர் நூல் உற்பத்தி தொடங்கியதும், இறக்குமதி செய்யப்படும் பாலியஸ்டர் நூலின் சுங்கத் தீர்வையை அரசு உயர்த்தியது. இதனால் ரிலையன்ஸ் லாபம் மேலும் ஏறியது, இந்திரா—பிரணவ் முகர்ஜீ—ஆர்கே தாவாண் ஆகியோரிடம் திருபாய் அம்பாணிக்கு இருந்த செல்வாக்கைப் பயன்படுத்தி இதைச் சாதித்தனர் என்பது தெரிந்து விட்டது. "அரசாங்க முடிவுகளில் தலையிட்டு தனக்குச் சாதகமான முடிவுகள் எடுக்கச் செய்வதை எந்த முதலாளிதான்பின் பற்றவில்லை" என்று அம்பாணியின் ஆதரவாளர்கள் அப்போது நியாயம் கற்பித்தனர்.

ஆனால் தரகு அதிகாரவர்க்க முதலாளிகளுக்கிடையிலான போட்டி காரணமாக அம்பாணியின் திடீர் முன்னேற்றத்தின் இரகசியங்களை வெளியே கொண்டு வந்து விட்டன. அம்பாணி மட்டுமல்ல தரகு அதிகார முதலாளிகளும், அரசியல் வாதிகளும், பத்திரிக்கையாளர்களும் கள்ளக் கூட்டுச் சேர்ந்து கொண்டு இந்நாட்டு மக்களை எப்படியெல்லாம் மோசடி செய்கின்றனர்; கொள்ளையடிக்கின்றனர் என்கிற உண்மை விவரங்களும் வெளியே வந்து விட்டன

● லஞ்ச ஊழல் மூலமாக ஏராளமான இறக்குமதி, ஏற்றுமதி லைசென்சுகளைப் பெறுவது ● இறக்குமதி—ஏற்றுமதி சுங்க வரி மற்றும் தீர்வைகளைத்தமக்குச் சாதகமாக, நிர்ணயிக்கும்படி செய்வது. ● இதனால் இறக்குமதி—ஏற்றுமதியில் கள்ளச் சந்தையை நிறுவி கோடி கோடியாகக் கொள்ளையடிப்பது. ● மலிவான கூலி கொடுத்து உற்பத்தி செய்யும் சிறு முதலாளிகளைப் பிடித்து உற்பத்தி செய்த சரக்குகளுக்குப் பிரபல கம்பெனி—தொழில்முத்திரை குத்தி அதிக விலைக்கு விற்பது ● இறக்குமதி—ஏற்றுமதிச் சரக்குகளின் மதிப்பீட்டில் தில்லுமுல்லுகள் செய்து சுங்கவரி மற்றும் தீர்வை மோசடி செய்வது ● இறக்குமதி—ஏற்றுமதி சரக்குகளின் பெயர்களை மாற்றி எழுதி மோசடி செய்வது ● இதனால் கிடைக்கும் கோடி கோடியான அந்நியச்

## அம்பாணியின் தில்லுமுல்லுகள்

● அரசின் புதியஇறக்குமதிக் கொள்கைகள் விதித்த தடைகளை மீறுவதற்காக கடன் அனுமதிக்கும் ஆவணங்களில் பழையதேதியிட்டுப் பயன்படுத்தியது — ரிலையன்ஸ். அதற்காக மூன்று அதிகாரிகள்மீது நடவடிக்கை எடுத்து விசாரணை நடத்தியது—ரிசர்வ்வங்கி. புதிய கொள்கைகள் வருவதுபற்றிய அரசு இரகசியத்தை அதிகாரிகள் மூலம் கடத்தியது ரிலையன்ஸ். அதன்மீது விசாரணை நடத்தியது—சிபிஐ. விசாரணைகள் கிடப்பில் போடப் பட்டுள்ளன.

● அரசு வங்கிகளில் கடன் வாங்கி முறைகேடாக தானே தனது கம்பெனி கடன் பத்திரங்களை வாங்கியது—ரிலையன்ஸ். கடன் பத்திரங்களைப் பிறகு பங்குகளாக மாற்றிக் கொண்டு பங்குகளுக்குரிய லாபத்தையும் சுருட்டிக் கொண்டது.

● "மாபெரும் தோல்வி (FIASCO) முதலீடு நிறுவனம்", "முதலைகள் முதலீடு நிறுவனம்" என்று பெயரிலேயே மோசடியும் கேலியும் உடைய மோசடிகம்பெனிகளின் பெயரில் ரிலையன்ஸ் பங்குகள் வாங்கப்பட்டன. அமெரிக்காவிலுள்ள "ஐலண்ட் ஆப் மான்" என்ற தீவில் வெளிநாட்டில் வாழும் இந்தியர் பெயரில் இந்தக் கம்பெனிகள் பதிவாகியுள்ளன. உண்மையில் அந்நிய செலாவணி மோசடிகளால் அம்பாணி சேர்த்த மூலதனத்தை, வெளிநாட்டில் வாழும் இந்தியருக்குரிய சலுகைகளைப் பயன்படுத்தும் நோக்கத்துடன் பினாமிகளை வைத்து முதலீடு செய்தார். அரசு விசாரணையிலிருந்து தப்புவதற்காக எந்த அரசும் விசாரிக்கவோ—வரிவிதிக்கவோ முடியாத அமெரிக்காவின் மற்றொரு பகுதிக்கு முதலீட்டுக் கம்பெனிகளைக் கொண்டு போய்விட்டார்.

● பி.டி.ஏ. ஆலைக்குத் தேவையான ஒரு பிரிவையே இரகசியமாகக் கடத்தி வந்து நிறுவிக் கொண்டார். விசாரணைக்கு வந்தபோது இலவசமாகப் பெறப்பட்டதென்று புளுகினார். இதனால் மேலும் அந்நியச் செலாவணி மோசடி செய்தார். இது தவிர 27 கோடி ரூபாய் சுங்கத் தீர்வை மோசடி செய்துள்ளார்.

● 1982இல் இந்திரா—பிரணாவ் தொடர்பைப் பயன்படுத்தி தான் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள பாலியஸ்டர் நூலுக்கும், இரசாயனக் கச்சாப் பொருட்களுக்கும் வரிப் பாதுகாப்பு வளையம் போட்டுக் கொண்டார். போட்டியாளர்களின் பொருட்கள்மீது வரியேற்றச் செய்து முடக்கினார். அதே போல தான் உற்பத்தி செய்யும் பாலியஸ்டர் நூல் மற்றும் துணிக்கு உற்பத்தி லைசென்சு கட்டுப்பாட்டைத் தளர்த்த வைத்தார். போட்டியாளர்களுக்கு கட்டுப்பாடு போட வைத்தார்.

● அரசுடைமை வங்கிக்கடனையும், பினாமிகளையும் வைத்து ரிலையன்ஸ் பங்குகளின் மதிப்பைச் செயற்கையாக ஏற்றியதோடு, பங்குதாரர்களிடம் மோசடி செய்து கொள்ளை லாபமடித்தார் அம்பாணி.




இரண்டு துணி ஆலை முதலாளிகளுக்கிடையிலான போரில் அணிவகுத்து நின்று பத்திரிக்கைகள் நடத்திய அம்பலப்படுத்தும் யுத்தம்.



படிப்பகம்

www.padippakam.com

செலாவணித் தொகையை வெளிநாட்டு வங்கிகளில் குவிப்பது அல்லது வெளிநாட்டு ஆலைகளில் மூலதனமிடுவது ● அதே மூலதனத்தைக் கொண்டு வெளிநாடுகளில் வாழும் இந்தியர் என்ற பினாமிகளை வைத்து இந்தியக் கம்பெனிகளின் பங்குகளை வாங்கி சலுகைகளை அடைவது ● அரசுடமையாக்கப்பட்டவங்கிகளில் கடன் பெற்று அதைக் கொண்டே மோசடியான பெயர்களில் பங்குகளை வாங்கி பங்குச் சந்தை மோசடிகளில் ஈடுபடுவது. ● வெளிநாட்டிலுள்ள கம்பெனிகளுடன் இரகசிய கூட்டு வைத்துக் கொண்டு ஆலைகள் மற்றும் தொழில் நுட்பத்தை வாங்கி வருவது ● அந்தக் கம்பெனிகளின் பங்குக்குரிய லாப விகிதமென்று கூறி மேலும் இந்திய பணத்தைக் கொள்ளையிட்டுச் செல்வது.

இப்படி ஏராளமான மோசடிகள்—தில்லுமுல்லுகள். அத்தனையும் சட்டப்படி பொருளாதார, கிரிமினல் குற்றங்கள். நாட்டின் தரகு அதிகார முதலாளிகள் அவ்வளவு பேரும் ஈடுபட்டுள்ள இந்தக் குற்றங்களைச் செய்வதில் திருபாய் ஹிராசந்த் அம்பாணிக்குள்ள அலாதியான திறமைதான் அவரைத் திடீர் முதலாளியாக்கியது. இவற்றோடு முக்கியமாக சரியான தருணத்தில் அரசியல் "புளியங் கொம்பை" அம்பாணி பிடித்துக் கொண்டது அவரது வெற்றியின் மிக முக்கியமான இரகசியம்.

அதாவது 1980 தேர்தலில் பாசிச இந்திரா என்கிற "பந்தயக் குதிரை"யின்மீது பணம்கட்டினார். ஆட்சி அதிகாரத்தை இழந்திருந்த இந்திராவின் தேர்தல் செலவுகள் அனைத்தையும் ஏற்றது அம்பாணிதான். இந்திரா பறந்த விமானம்—கார்கள் எந்த பெட்ரோல் கிடங்கிலும் எண்ணெய் நிரப்பிக் கொள்ளலாம். பில்தொகை அம்பாணி செலுத்துவார். இவை தவிர இந்திரா தங்குவது, விளம்பரம் எல்லாம் அம்பாணியே கவனித்துக் கொண்டார். இந்திரா வெற்றி பெற்று பிரதமராகப் பிரமாணம் செய்ததும் கலந்து கொண்ட நிகழ்ச்சி, டெல்லியில் அம்பாணி ஏற்பாடு செய்த விருந்து தான். அப்புறம் நான்காண்டுகள் டெல்லியில் கொடி கட்டிப் பறந்தது விமல்—ரிலையன்ஸ்— அம்பாணி தான்! ஜவுளித் தொழிலில் எந்த முடிவானாலும் அம்பாணிக்குச் சாதகமாகவே இருந்தது. நிதி அமைச்சராயிருந்த பிரணவ முகர்ஜியும், இந்திராவின் அந்தரங்க செயலாளர் ஆர்கே தாவானும் அம்பாணிக்குச் சேவை செய்ய எப்போதும் தயாராயிருந்தனர். ஜவுளித் தொழிலில் கிடுகிடுவென உயர்ந்து ரிலையன்ஸ் ஏகபோக நிலையை எட்டியது. மற்ற பிற முதலாளிகள் பொருமினார்கள்; பொங்கினார்கள்; சரிந்தார்கள்.

அம்பானியின் தொழில் ரீதியிலான முதல் எதிரி நுஸ்லி வாடியா; ஆர்கே ஆலைகளின் முதலாளி கபால் மஹ்ரா மற்றொருவர். அம்பாணியை வீழ்த்துவதற்காக 1982 இல் அவரது எதிரிகள் கூட்டுச் சேர்ந்து ஒரு சதியில் ஈடுபட்டனர். ரிலையன்சின் பங்குகளை இரகசிய

## நுஸ்லி வாடியா பூர்வீகம்!

நுஸ்லிவாடியா—திருபாய் அம்பாணியின் தொழில் எதிரி. அம்பாணியைப்போல திடீர் முதலாளி ஆனவரல்ல. பரம்பரை பணக்காரர். முஸ்லீம் லீகின் தலைவரும் பாகிஸ்தானின் முதல் அரசுத் தலைவருமான முகமது அலி ஜின்னா ஒரு பார்சிப் பெண்ணைக் காதல் திருமணம் செய்து கொண்டார். அவர்களுக்குப் பிறந்த மகள் தீனாவை பாம்பே டையிங் என்ற துணி ஆலை முதலாளியும் பார்சியுமான நெவில் வாடியா காதலித்து மணந்து கொண்டார். அவர்களுக்குப் பிறந்தவர்தான் "கவர்ச்சி மிகு" முதலாளி நுஸ்லி வாடியா.

நெவில் சுவிட்சர்லாந்தில் வாழுகிறார். பாம்பே டையிங் தலைவரும், நிர்வாக இயக்குனருமான நுஸ்லி வாடியா இந்தியாவில் தங்கியிருக்கும் இங்கிலாந்து குடிமகன். ரயில்வே மந்திரியும், குவாலியர் "ராஜ குலக் கொழுந்துமான" மாதவராவ் சிந்தியாவின் தொழில் பங்காளி, ஆர்எஸ்எஸ் தலைவர் நானாஜி தேஷ்முக் வாடியாவின் நெருங்கிய நண்பர். நானாஜி மற்றும் சிந்தியா தொடர்பை வைத்துக் கொண்டு ஜனதா ஆட்சியிலும் 2 ஆண்டுகள் ராஜீவ் ஆட்சியிலும் பல காரியங்களைச் சாதித்துக் கொண்டார், நுஸ்லி வாடியா.

அம்பாணி அளவு பல நூறு கோடிகள் இவருடைய தொழிலில் புரளுவதில்லை. சில நூறு கோடிகள் தான், ஆனாலும் வெவ்வேறு பெயர்களில் சிறுவட்டத்துக்குள் உடமையாகக் கொண்டு லாபமடிப்பவர். நவ்ரோஜி வாடியா மற்றும் மகன்கள், பிஸ்வ வியாபார கம்பெனி, லேகா கிரண் முதலீடு கம்பெனி, பாம்பே டையிங், பிஆர்டி, ஜியார்ஜ் வில்ஸ் மற்றும் மகன்கள் என்று பலபெயர்களில் பங்கு மூலதனம், கடன் மற்றும் லைசென்சு பெற்று கொள்ளையடிக்கிறார். பங்குக் கணக்குகளிலும், அந்நியச் செலாவணியிலும் பல மோசடிகள் செய்துள்ளார். ஜனதா ஆட்சியில் டிஎம்டி—கச்சாப் பொருட்கள் அடிப்படையிலான பாலிப்யஸ்டர் ஆலைக்கு லைசென்சு பெற்றதோடு ராஜீவ் ஆட்சிக்கு வந்ததும் அம்பாணியின் பிடிஏ—ஆலையை முடக்கவும், வரி ஏற்றம் செய்யவும், கோயங்காவின் நட்பை வைத்துக் கொண்டு அம்பாணியின் தில்லுமுல்லுகளை அம்பலப்படுத்தவும் செய்தார். அதேசமயம் ராஜீவ் சிந்தியா—வி.பி.சிங் அரசியல் தொடர்பைப் பயன்படுத்தி மோசடிகளில் சிக்கிய முதலாளிகளுக்கு இடைத் தரகு வேலை செய்து உதவினார்.

நுஸ்லி வாடியா



கோயங்கா



மாதவராவ் சிந்தியா



படிப்பகம்

www.padippakam.com

மாக வாங்கினார்கள். திடீரென்று ஒருநாள் அவற்றையெல்லாம் விற்று பணத்தை தரும்படி கோரினர். 25 நிமிடத்தில் ரிலையன்சின் பங்குத் தொகை மதிப்பு 131 ரூபாயிலிருந்து 121 ரூபாயாக வீழ்ந்தது. பங்குச் சந்தையில் இந்த வீழ்ச்சி முன் எப்போதும் கண்டதில்லை; பெரும் பீதி உருவானது.

அம்பாணியோ அசந்துவிடவில்லை. தனக்கு வேண்டிய ஆட்களைப் பிடித்து பங்குகளை அவரே விலைக்கு வாங்கினார். அதே நாளில் மீண்டும் 125 ரூபாயாக பங்கு மதிப்பு உயர்ந்தது. அரசாங்கத்தில் தனக்குள்ள செல்வாக்கைப் பயன்படுத்த நாலு நாட்கள் பங்குச் சந்தையை மூடச் செய்தார். "ரிலையன்ஸ் சங்கத்தின் நண்பர்கள்" என்ற பெயரில் தனது ஆட்களை வைத்து சில வாரங்களில் 175 ரூபாயளவு செயற்கையாகப் பங்குகளின் மதிப்பை ஏற்றினார். கடைசியில் கம்பெனியின் எதிரிகளுக்கு 3.5 கோடி ரூபாய் நட்டம் ஏற்பட்டது.

இந்திரா சாவு, ராஜீவ் ஆட்சிக்கு வந்தது பிரணவ முகர்ஜி, ஆர். கே. தவான் பதவி இழந்தது ஆகியவற்றைத் தொடர்ந்து டெல்லிக் கோட்டையில் அம்பாணியின் கை தாழ்ந்தது. ராஜீவின் நெருங்கியநண்பர் 'குவாலியார் ராஜா' மாதவராவ் சிந்தியா மத்திய மந்திரியானார்; அவர் நுஸ்லி வாடியாவின் தொழில் கூட்டாளி. எனவே அம்பாணியின் எதிரிகளது கை ஓங்கியது. நுஸ்லி வாடியாவின் நெருங்கிய நண்பரும் இந்தியன்எக்ஸ்பிரஸ் முதலாளியுமான கோயங்கா இவர்களுடன் சேர்ந்து கொண்டார். அம்பாணியின் புதிய தொழில் முயற்சிகள் முடக்கப்பட்டன. பொருளாதாரத் துறையில் சில நிபுணர்களைக் கொண்ட இரகசியக் குழு அம்பாணியின் தில்லுமுல்லுகளைத் தோண்டி எடுத்தன. அரசு அதிகாரிகளும், வெளிநாட்டிலுள்ள ஃபேர் ஃபாக்ஸ் துப்பறியும் நிறுவனமும் இதற்குப் பயன்படுத்தப்பட்டன. இந்தியன் எக்ஸ்பிரஸ், பிளிட்ஸ், இம்பிரிண்ட்,ஆர்கனைசர், பாம்பே, டைம்ஸ் ஆஃப் இந்தியா, அப்டேட் மற்றும் பிஸினஸ் இந்தியா ஆகிய பத்திரிக்கைகளில் அம்பாணியின் தில்லுமுல்லுகள் நாறின.

அம்பாணியும் விடவில்லை. தானும் ஒரு நிபுணர் குழு அமைத்து கோயங்காவின் தில்லுமுல்லுகளைத் தோண்டி எடுத்தார். பத்திரிக்கைகளில் ஆள் பிடித்தார். முதலாவதாக முன் வந்தது போலிக் கம்யூனிஸ்டுகள் நடத்தும் பேட்ரியாட் (தேசபக்தன்)என்கிற பத்திரிக்கை.(வெட்கக்கேடு!) அது 13 கட்டுரைகளில் அம்பாணிக்காக வக்காலத்து வாங்கியது. 'ஆன்லுக்கர்' பத்திரிக்கை மூலம் நுஸ்லிவாடியா—மாதவராவ் சிந்தியாவின் மோசடிகளை அம்பாணி அம்பலப்படுத்தினார். இந்தியன் எக்ஸ்பிரஸ் உட்பட எல்லாப் பத்திரிக்கைகளிலும் ரிலையன்ஸ் மீதான குற்றச்சாட்டுகளுக்குப் பதிலளித்து விளம்பரம் கொடுத்தார். கோயங்காவுடனும் நுஸ்லி வாடியாவுடனும் சமரசத்துக்கு முயன்றார். எதுவும் பலிக்காமல் போகவே அம்பாணி தனக்கே உரிய 'கள்ள வியாபாரத்' திறமையைப் பயன்படுத்தினார்.

பாசிச ராஜீவ் கும்பலின் முக்கியப் புள்ளியான அமிதாப்பச்சன் தம்பி அஜிதாப் பச்சன்— வெளிநாட்டில் குடியேறிய ராஜீவின் பினாமி. ராஜீவின் நெருங்கிய நண்பரும் மற்றொரு பெரிய தரகு அதிகார முதலாளியுமான லலித் தாபார். இவர்கள் அனைவருடய அந்நியச் செலாவணி மோசடிகளைத் தோண்டுவதற்கு கோயங்கா—நுஸ்லிவாடியா கும்பல் முயலுகிறது. நிதி மந்திரி வி. பி. சிங்கும் அவரது அதிகாரிகளும் இதற்கு உடந்தை. இதற்காகவே ஃபேர் ஃபாக்ஸ் நிறுவனம் அமர்த்தப்பட்டது. இந்தக் காரணங்கள் அம்பாணிக்குப் புதுவாழ்வளித்தன. அம்பாணி—அமிதாப்—ராஜீவ் கூட்டு உருவாகியது.

அதைத் தொடர்ந்து கோயங்கா—நுஸ்லி வாடியா கும்பலை ஒடுக்குவதற்காக அம்பாணி—அமிதாப்—ராஜீவ் கும்பல் மேற்கொண்ட போர்ஜரி (போலி) ஆவணங்கள், சோதனை, கைது, பதவி பறிப்பு ஆகிய நடவடிக்கைகள் காரணமாக ஃபேர் ஃபாக்ஸ் விவகாரம் வெடித்து நாடு முழுவதும் நாறுகிறது. அதன் நாற்றம் உலகம் முழுவது தெரிகிறது.

1985—86 ஆகிய இரண்டு ஆண்டு இடைவெளிக்குப் பிறகு டெல்லிப் பேரரசில் விமல்—ரிலையன்ஸ்—அம்பாணியின் கொடி மீண்டும் பட்டொளி வீசிப் பறக்கிறது. அம்பாணியின் பொருளாதார—கிரிமினல் குற்றங்களைத் தோண்டுவதற்கு புறப்பட்ட ஃபேர் ஃபாக்ஸ்— கோயங்கா— நுஸ்லிவாடியா—வி.பி.சிங் கும்பலுக்கு எதிராகவே "தேசத்துரோக சதிகாரக் கூட்டம்" என்கிற பட்டங்கட்டிவிட்டார் அம்பாணி. தாக்கர்—நடராஜன் கமிஷன் தீர்ப்பு இறுதியில் அம்பாணியின் மோசடிகளுக்கு அளிக்கப்பட்ட பாராட்டுப் பத்திரம். நாடாளுமன்ற அரசியலின் நாயகர்களாக எம்ஜி ஆர்—என் டி ஆர் வந்ததைப் போல, நகரங்களின் சட்ட ஒழுங்கை தீர்மானிப்பவர்களாக வரதராஜ முதலியார்-சாராய உடையார்—முகமது இப்ராஹிம் போன்ற மஃபியா தலைவர்கள் வந்ததைப் போல, தொழில் துறையின் ஏக போகப் பேரரசனாக திருபாய் ஹிராசந்த் அம்பாணி வந்திருக்கிறார்! நேரு பரம்பரையின் ஜனநாயக சோசலிசம் வெற்றிபெற்றுவிட்டது!

● ஆர். கே.

## நீர் பிரபுக்கள்


மகேஷ் கோஷ்


ரவிந்திரநாத்கோஷ்

நதியை உடமையாக்கி கொள்ளையிடும் பானிதார்கள்

கங்கை புனிதமானது; கங்கை நீரில் குளித்தால் புண்ணியமுண்டு. கங்கை நீருக்கு தீராத வியாதிகளை குணப்படுத்தும் மகிமையும் இருப்தாகவும் சொல்வதுண்டு. ஆனால் இந்த புண்ணிய கங்கையில் மீன் பிடித்து வாழ்க்கை நடத்தும் மீனவர்களுக்கோ தினமும் 'நரக' வாழ்க்கைதான். தொழிலுக்குப் போனவர்கள் இங்கு அடிக்கடி காணாமல் போவதும், காணாமல் போன மீனவர்களின் உடல் அங்கங்கள் சில நாட்கள் கழித்து கங்கையில் மிதப்பதும் இங்கு சர்வ சாதாரணமாக நடக்கும் நிகழ்ச்சி.

கடந்த நவம்பர் மாதம் பீகார் —சாகிப் கஞ்சிலிருந்து பகல்பூர் நோக்கி கங்கையில் சென்ற 12 மீனவர்கள் திரும்பவே இல்லை. சில நாட்கள் கழித்து போலீசில் புகார் செய்யப்பட்டு, தேடிப் பார்த்ததில் கால்கள் அற்ற நான்கு உடல்கள் மட்டுமே மீட்கப்பட்டது. நடந்தது விபத்து அல்ல கொலை என்பது உறுதிப்படுத்தப்பட்டது. ஒரே நேரத்தில் 12 பேர் கொல்லப்பட்டது அறிந்து கொதிப்படைந்த சக மீனவர்கள் ஆர்ப்பாட்டத்தில் இறங்கியவுடன், ஓட்டுப் பொறுக்கி கட்சிகள் தத்தம் பங்குக்கு அப்பிரச்சினையை சட்டசபையில் எழுப்பி முடங்கிக் கொண்டன. பீகார் முதலமைச்சர் சார்பில் கண்துடைப்பு அறிக்கைகளும், கொலைக்கு காரணமானவர்கள் மீதான கண்டனகணைகளும் வீசப்பட்டு, பிரச்சினை ஒருவாறு முனை மழுங்கடிக்கப்பட்டு கிடப்பில் போடப்பட்டது.

தொழிலுக்குப் போகும் பீகார் மீனவர்கள், இப்படி ஒட்டுமொத்தமாக கங்கை நதியில் வெட்டி வீசப்படுவது ஏதோ இன்று நேற்று நடக்கும் விசயமல்ல. 'சுதந்திரத்'திற்கு முன்பிருந்தே தொடர்கிறது; பல நூறு ஆண்டு காலமாக வழிமுறை வழிமுறையாக தொடரும் கொடூரம் இது.



படிப்பகம்

www.padippakam.com

# “உலகம் பிறந்தது எனக்காக! ஓடும் நதிகளும் எனக்காக!”

## பானிதார்களின் கொட்டம்

ஆயிரக்கணக்கான நிலத்தை
ளைத்துப் போட்டு, விவசாயி
ளை சுரண்டிக் கொழுக்கும் நிலப்
புக்களைப் போல, பீகாரில், பல
ல் நீளத்திற்கு கங்கை ஆற்றைச்
ந்தம் கொண்டாடும் நீர் பிரபுக்
அரங்கேற்றும் அக்கிரமம்தான்
ந்த மீனவர் படுகொலைகள்.

ரபீந்தரநாத் கோஷ், மகேஷ்
ாஷ், சோம்நாத் கோஷ், முஸா
ப் ஹுசைன் பர்மானிக் என்ற
ன்கு நீர் பிரபுக்களின் (பானிதார்
) கையில்தான் இன்று பீகார்
வர்களின் வாழ்வும் சாவும்
ங்கி உள்ளது. ஏறக்குறைய
ரிலிருக்கும் 25,000 மீனவக்
ம்பங்கள் இந்த நீர் பிரபுக்களின்
மைகள். பீகார் எல்லையின்
ப் பரப்பில் மீன் பிடிக்கும் உரி
மயை ஜஹாங்கீர் பேரரசரே
கள் முன்னோர்களுக்கு வழங்கி
ாகவும் அவ்வுரிமையை தாங்
இழக்கத் தயாரில்லை எனவும்
ஜிக்கிறார்கள்.

நீர் பிரபுக்கள் தங்கள் சார்பாக
ழிலுக்கு செல்லும் மீனவர்களி
வசூலிப்பதற்காக தனியாக
ட்களை நியமிப்பதோடு, அவ்
மையை குத்தகையும் விடுகின்ற
. குத்தகை எடுத்தவர்கள், மீன
களின் மீது மேலும் பலமடங்கு
சுமத்தி தம் விருப்பம் போல்
ள்ளையடிப்பதை சட்டபூர்வ
மையாகவே அனுபவிக்கின்ற
. இவை மட்டுமல்ல, நீர் பிரபுக்
ும், குத்தகைதாரர்களும் சொந்
ாக அதிநவீன படகுகளையும்,
பிடி வலைகளையும் வைத்துக்
ண்டு, நீண்டதூரம் கங்கைக்குள்
ன்று சினைமீன், சினை முட்டை
அனைத்தையும் வாரி விடுகின்
ர். இன்னும் ஒரு படி மேலே
சென்று, வரி செலுத்தும் மீனவர்களிடம், கங்கையின் நடுவே, அவர்களுடைய உடமைகளையும், மீன்களையும் கூட சூறையாடி விடுவதுண்டு. எதிர்க்கும் மீனவர்களை பல வழிகளில் மிரட்டுவதோடு, கங்கையிலேயே அவர்களை வெட்டிக் கொன்று மீன்களுக்கு இரையாக்கி விடுகின்றனர்.

சாதாரணமாக சிறுவலையை உடமையாகக் கொண்டு மாதம் முன்னூறுரூபாய் அளவுக்கு மீன்பிடிக்கும் மீனவர்கள் பானிதார்களுக்கு ஆண்டு ஒன்றுக்கு வரியாக ரூபாய் 600 கொடுக்க வேண்டும். இதன் நடுவிலேயே, அம்மீனவர் பெரிய வலையை உபயோகித்ததாக பொய்யாக குற்றம் சாட்டி வரியை திடலடியாக இரண்டு, மூன்று மடங்குக்கு மேலாக உயர்த்தி வசூலித்துக் கொள்கிறார்கள்.

முடிவே இல்லாத இந்த கொடூர சுரண்டலுக்கும் அடக்குமுறைக்கும் முடிவுகட்ட மீனவர்கள், ‘சம்பூர்ண கிரந்தி மஞ்ச்’, ‘கங்கா முக்தி அந்தோலன்’ என்று அமைப்பாக திரண்டு, கோரிக்கைகள், மனுக்கள் படகு ஊர்வலம் என்று போராட்டத்தை முன்னெடுத்து சென்றார்கள். பீகார் அரசும், பாணிதார்களும், எதற்கும் அசைந்து கொடுக்காமல் இருந்ததோடு, மறைமுக தொல்லைகள் கொடுத்ததால் மீனவர்கள், அடுத்த கட்ட போராட்டத்திற்கு தயாரானார்கள். ‘அக்டோபர் மாதத்திலிருந்து வரிகொடுக்க மாட்டோம்! கங்கையை விடுதலை செய்வோம்!’ என்ற கோஷங்களின் கீழ் ஒன்று திரண்டு அதை செயல்படுத்தியும் காட்டினார்கள்.

பீதியடைந்த பானிதார்கள் பீகார் அரசைக் கைக்குள் போட்டுக்கொண்டு மீனவர்கள் மீது மூர்க்கமாக பாய்கிறார்கள். தங்களுடைய நடவடிக்கையின் ஒரு கட்டமாகத்தான் 12 மீனவர்களை போலீசு துணையுடன் நடுக்கடலில் வெட்டிக் கொன்றார்கள். பீகார் அரசு நரித்தனத்தோடு, கொலைக்கு சில தனி நபர்களின் பகை உணர்வு தான் காரணம் என்று சில உள்ளூர் ரௌடிகளையும், போராடும் அமைப்பு முன்னோடிகளையும், கிரிமினல் குற்றங்களின் கீழ் சரிசமமாக கைது செய்து தவறு இரண்டு பக்கமும் உள்ளதாகவும், அதை விசாரிப்பதாகவும் நாட்டாண்மை செய்கிறது.

ராஜீவ் கும்பலோ 21ஆம் நூற்றாண்டை நோக்கி நாட்டை முன்னேற்றுவதாக வாய்ச்சவடால் அடிக்கிறது. நாட்டிலோ ஜமீன்தாரி முறை ஒழிக்கப்பட்டதாக சொல்லப்பட்ட பின்னும்கூட பொதுச் சொத்தான ஆற்றை தனியுடமையாக்கி, முகலாயர் காலத்திலிருந்து உரிமை கொண்டாடி கொக்கரிக்கிறது பானிதார் கூட்டம். இந்த கும்பலின் கொலைகார, கொள்ளைக்காரச் சுரண்டலுக்கு பாதுகாப்பளிக்கிறது காங்கிரசு தேசத்துரோக ராஜீவ் கும்பல்! ராஜீவ் கனவு காணும் 21 ஆம் நூற்றாண்டு இதுவன்றி வேறல்ல! ●

‘கங்கையை விடுதலை செய்’ என முழக்கமிட்டு மீனவர்கள் 300 கிலோமீட்டர் தூரத்திற்கு நடத்திய படகு ஊர்வல போராட்டம்.



படிப்பகம்

www.padippakam.com

# டெங்-ராஜீவ்-கோர்பசேவ்

'பிரஸ்டோரிகா — அக்டோபர் புரட்சி தொடர்கிறது. இரண்டாவது புரட்சி ஆரம்பமாகிறது' என பெருத்த ஆரவாரத்துடன் புதிய கொள்கையை—பிரஸ்டோரிகாவை அண்மையில் அறிவித்துள்ளார் ரசிய அதிபர் கோர்ப்பசேவ்.

உலகம் முழுவதிலும் இப்புதிய திட்டம் பற்றி பரபரப்புடன் பேசப்படுகிறது. பத்திரிக்கைகள் பத்தி பத்தியாக புதிய கொள்கை பற்றி பாராட்டி எழுதுகின்றன. போர்வெறி கொண்ட அரக்கன் ரீகனையே சமாதான ஒப்பந்தத்தில் கையெழுத்திட வைத்து, நடுத்தர ஏவுகணைகளை ஐரோப்பாவிலிருந்து அகற்றிய சமாதானத் தூதுவன் என்ற புகழ் மங்குமுன்னே பிரஸ்டோரிகா பற்றிய புரட்சிகர அறிவிப்பு வந்து விட்டது என புகழாரம் சூட்டுகின்றன.

கோர்பசேவ் அறிவித்த புதிய கொள்கைதான் என்ன? பிரஸ்டோரிகா—கிளாஸ் நாஸ்ட் என்பது என்ன?

அனைத்து துறைகளிலும் மறுகட்டமைவை முன்னிறுத்துவது பிரஸ்டோரிகா. உற்பத்தியில் துரித வளர்ச்சியே பிரஸ்டோரிகாவின் நோக்கம். இதற்கான கருவியாக, நெம்புகோலாகத் திகழ்வது கிளாஸ் நாஸ்ட்—அதாவது எந்த ரகசியமுமின்றி வெளிப்படையாக, பகிரங்கமாக, திறந்த மனதுடன் இருப்பதாகும்.

உற்பத்தியில் துரித வளர்ச்சியைக் கொண்டு வருவதற்காக, கட்சியிலும் ஆட்சியிலும் மாற்றங்களைச் செய்வது; சுருக்கமாக இதையே மறு ஒழுங்கமைப்பு—பிரஸ்டோரிகா என்றழைக்கிறது கோர்பசேவ் கும்பல். உற்பத்தியில் துரித வளர்ச்சியைக் கொண்டுவர அப்பட்டமாக தனியார் துறையை ஊட்டி வளர்ப்பது என்ற திட்டத்தையே முன்னிறுத்துகிறது. இதற்காக பழைய சட்டங்கள் மரபுகளை உடைத்தெறிவது; தனியார் துறை முதலாளித்துவ வளர்ச்சிக்காக 'இரும்புத் திரை'யை அகலத் திறப்பது; இதையே கிளாஸ் நாஸ்ட் — வெளிப்படையாக இருப்பது; கூடுதல் ஜனநாயகம் என்றழைக்கிறது கோர்பச்சேவ் கும்பல்.

கூடுதல் ஜனநாயகம்—சமுதாயத்தை ஜனநாயகப் படுத்துவது என்ற பெயரில் அரசுத்துறைக்கும் அனுமதி அதே போல தனியார் துறைக்கும் அனுமதி; அனைத்துக் கும் உரிமை;ஜனநாயகம். இதுதான் கோர்பசேவ்பிராண்டு சோசலிசம்.

தேக்கம், பழமைவாதம், காலாவதியான வேலை முறை, பின் தங்கிய சமூக அமைப்பு ஆகியவற்றை அடித்து நொறுக்கிவிட்டு பாய்ச்சல், முன்னேற்றம், நவீன மயம், விஞ்ஞான—தொழில் நுட்பத்தில் புரட்சி, அறிவு பூர்வ வளர்ச்சி முதலியவற்றுக்கான ஆக்கபூர்வமான மாற்றுதான் கிளாஸ் நாஸ்ட்—பிரஸ்டோரிகா என்று புதிய தாயத்து விற்கிறார் கோர்பசேவ்.

21ம் நூற்றாண்டை நோக்கி விரைவாக முன்னேற வேண்டுமென்றால் நிர்வாக முறைகளில் மேற்கத்திய பாணியை கொண்டு வர வேண்டியது அவசியம் என்பதை மறு ஒழுங்கமைப்பு பற்றிய கோர்பசேவின் பேச்சுக்களும் கட்டுரைகளும் குறிப்பிடுகின்றன.

○ ப்ரெஸ்ட் மாவட்டத்தில் 'பாம் யாட் இலியிச்சா' கூட்டுப் பண்ணை பின்தங்கிய நிலையிலிருந்தது. லிடியா பிரைஸ்கா என்ற மத்திய கமிட்டி பெண் உறுப்பினர் அதை ஈராண்டுக்கு குத்தகை எடுத்து நடத்தினார். அவரது பண்ணையில் 100 கறவை மாடுகளும், 50 ஹெக்டேர் நிலமும் இருந்தது. லிடியா தானே தனியாக பால் கறந்தார். அவரது கணவரும் மகளும் தீவனம் தயாரிப்பது, மாடுகளை மேய்ப்பது ஆகிய உதவிகளைச் செய்தனர். ஓராண்டுக்குள் அவர்கள் மகத்தான சாதனை புரிந்துள்ளனர். ஆண்டுக்கு சராசரியாக ஒருகறவை மாடு தரும்பால் 2917 கிலோவிலிருந்து 5580 கிலோவாக உயர்ந்துள்ளது.

—இப்படிப்பட்ட பல்வேறு உதாரணங்களின் மூலம், மீண்டும் தனியார் துறைக்கு விடுவதன் மூலம் உற்பத்தியை பெருக்க முடியும் என நியாயப்படுத்தப்படுகிறார் கோர்ப்பசேவ்.

இது ஏதோ புதிய விசயமல்ல. சீனத்தில் ஏற்கனவே தனியார் துறைக்கும், ஏகாதிபத்தியக் கொள்ளைச் சுரண்டலுக்கும் டெங் கும்பல் நாட்டுப் பொருளாதாரத்தைத் திறந்து விட்டுள்ளது. அதே முறைதான் இன்று ரசியாவில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க எடுபிடியான துக்ளக் சோ முதல் கேடுகெட்ட பிற்போக்கு பார்ப்பன இதழான 'இந்து' ஆங்கில நாளேட்டின் 'ஃபிரண்ட்லைன்' இதழ் வரை சீன—ரசிய மாற்றங்களை வாழ்த்திவரவேற்கின்றன. மார்க்சியம் காலாவதியாகிவிட்டது என ஆரவாரிக்கின்றன.

கோர்ப்பசேவ் கும்பல் அறிவித்திருப்பது எதிர்பார்க்காத ஒன்றோ அல்லது ரசியாவில் இது வரை இல்லாத ஒன்றோ அல்ல. ஏற்கனவே இவர்களின் முன்னோடிகளான குருச்சேவ்—பிரஷ் கும்பல் சோசலிசத்தைவெட்டியெறிந்து அதிகார வர்க்க முதலாளித்துவத்தை ஊட்டி வளர்த்திருந்தது.

அதிலிருந்து இன்னும் ஒருபடி மேலே போய் தனியார் முதலாளித்துவத்தை விரைவாகக் கொண்டு வருவதே கோர்பசேவின் புதிய மறு ஒழுங்கமைப்பான—பிரஸ்டோரிகா திட்டம்.

●

# யாருக்கு யார் ஆசான்?

மாபெரும் பாட்டாளி வர்க்க ஆசான்கள் லெனினும் ஸ்டாலினும் கட்டிக்காத்த சோசலிசக்கோட்டையை துரோகி குருச்சேவும் அதன் பின் பிரஷ்னேவும் கைப்பற்றிய பிறகுசோசலிச ரஷியா சமூக ஏகாதிபத்தியமாகச் சீரழிந்தது. குருச்சேவ் அதிகாரத்தில் இருந்த காலத்தில் துவங்கிய முதலாளித்துவ மீட்சியானது பிரெஷ்னேவ் காலத்தில் சோசலிசத்தை முற்றாக சீரழித்து ஏகாதிபத்தியமாக வளர்த்தெடுத்து ஆக்கிரமிப்பு விஸ்தரிப்பு கொள்கைகளை முன் நடத்தி ரஷியாவை உலக மேலாதிக்க வல்லரசாக மாற்றியது.

அப்பட்டமாக அதிகார வர்க்க சிறு கும்பலின் ஆட்சியை நிறுவி, சோசலிச ஜனநாயக ஆட்சிமுறையை பிரஷ்னேவ் வெட்டிச் சிதைத்தார். மாபெரும் ரஷிய பாட்டாளி வர்க்கக் கட்சியை திரிபுவாதக்கட்சியாகச் சீரழித்து, புரட்சிகர கட்சி அணிகளைச் சிறையிட்டு, தனது விசுவாச கும்பலை கட்சியிலும் ஆட்யிலும் திணித்தார். மையப்படுத்தப்பட்ட திட்டமிட்ட பொருளாதாரத்தை யுத்த தயாரிப்பில் முடுக்கி விட்டார். இதன் விளைவாக உணவு மற்றும் நுகர் பொருள் உற்பத்தி பின்னுக்குத் தள்ளப்பட்டது. அதாவது ஒரு டாங்கியை தொழில்நுட்ப ரீதியில் சிறந்ததாக எப்படி வடிவமைப்பது என்பதில் முன்னேறியிருந்த ரஷியா, ஒரு பேனாவை எப்படி தயாரிப்பது என்பதில் தொழில்நுட்ப ரீதியில் பின்தங்கியிருந்தது. இந்த ஏற்றத் தாழ்வானது குறுகிய காலத்

படிப்பகம்

www.padippakam.com

திலேயே பொருளாதார நெருக்கடியை முன்தள்ளியது. கள்ளச் சந்தையும் ஊழலும் தலைவிரித்தாடியது.

இத்தனை நாளும் 'இரும்புத் திரையிட்டு' இந்த உண்மைகளை மூடி மறைத்துவந்த சமூக ஏகாதிபத்தியவாதிகள் இன்று நெருக்கடி முற்றியதும் தோல்வியை ஒப்புக்கொண்டு தங்களது முன்னாள் எஜமானர்களையே சாடுகின்றனர். இன்று அரியணையில் உள்ள கோர்ப்பசேவ் கும்பல் பிரஷ்னேவ் கும்பலுக்கு எதிராகவே ஓர் இரகசிய ஆட்சிக் கவிழ்ப்பை அரங்கேற்றி வருகிறது. கடந்த ஆண்டுகளில் ரஷியப் பத்திரிக்கைகளில் பிரஷ்னேவ் கடுமையாக விமர்சிக்கப்பட்டார். "பிரஷ்னேவ் நாட்டை எதிர்திசையில் வழி நடத்தினார். கரடு தட்டிப் போன அவரது 18 ஆண்டுகால மந்த ஆட்சியானது பொருளாதார மற்றும் சமூக நெருக்கடியைத் தீவிரமாக்கி விட்டுள்ளது" என்று சாடுகிறது கோர்ப்பசேவ் கும்பல்.

அந்தோ! பரிதாபம்! சோசலிசக் கூட்டுப் பண்ணைகளை உடைத்தெறிந்து அதிகாரவர்க்க ஏகபோக முதலாளித்துவத்தை வளர்த்தெடுத்த பிரெஷ்னேவ் இன்று குப்பைத் தொட்டியில் வீசப்படுகிறார். 1985ம் ஆண்டு நடந்த ரஷிய கம்யூனிஸ்ட் கட்சிக் காங்கிரசில் பிரஷ்னேவ் கும்பலைச் சேர்ந்த மத்தியக் கமிட்டி உறுப்பினர்கள் கழித்துக் கட்டப்பட்டனர். நாடு முழுவதும் பிரஷ்னேவ் கும்பலின் விசுவாச கட்சி ஊழியர்களும், அரசு ஊழியர்களும் பதவி நீக்கம் செய்யப்பட்டனர்.

பிரஷ்னேவ் அப்படி என்ன பெரிய தவறு செய்து விட்டார்? வளர்ந்து வரும் தேவைகளுக்கேற்ப மேலும் ஒருபடி முன்சென்று வெளிப்படையாகவே தனியார் துறை முதலாளித்துவத்தை அங்கீகரித்து ஊட்டி வளர்க்காததுதான் அவரது தவறு என்கிறது கோர்ப்பபேவ் கும்பல். இதுதான் பிரஷ்னேவ் பிராண்டு சோலிசத்துக்கும் கோர்ப்பசேவ் பிராண்டு சோலிசத்துக்கும் உள்ள வேறுபாடு.

எனவேதான் பழைய தவறுகளைக் களைவது என்பதன் பெயரால் பிரஷ்னேவ் கும்பலின் மீது தாக்குதல், நாட்டை நவீனப்படுத்துவது என்பதன் பெயரால்தனியார் துறை முதலாளித்துவத்தை அங்கீகரித்து ஆதரிப்பது, இதற்காக கட்சியிலும் ஆட்சியிலும் சீர்திருத்தங்களைச் செய்வது—இதுதான் கோர்ப்பசேவின் பிரஸ்டோரிகா திட்டத்தின் சாரம்.

உள்நாட்டில் தீராத உணவுப் பற்றாக்குறையாலும், மக்களின் நுகர்பொருள் தேவையை ஈடுசெய்ய முடியாததாலும் எங்கே, கலவரங்களும் அரசியல் நெருக்கடி



யும் ஏற்பட்டு விடுமோ என்று கோர்ப்பசேவ் கும்பல் அஞ்சுகிறது. ஏகபோக அதிகாரவர்க்க முதலாளித்துவ ஆட்சிமுறையால் ஏற்கனவே தனது தொங்குசதை நாடான போலந்தில் ஏற்பட்ட உணவு நெருக்கடியும், போராட்டமும் அதற்கு கிலியூட்டுகிறது. உள்நாட்டில் அரசியல்–பொருளாதார நெருக்கடியில் சிக்கிக் கொண்டால், உலக மேலாதிக்கப் போட்டியில் அமெரிக்காவை விஞ்ச முடியாமல் போய்விடுமோ என்று மிரள்கிறது.

"இப்போது நெருக்கடிக்கு முந்தைய கட்டத்தில்—அதன் விளிம்பில் ரஷிய சமுதாயம் இருக்கிறது. எனவேதான் பிரஸ்டோரிகா இன்றைய மிக அவசரத் தேவையாக உள்ளது. இதைத் தாமதப்படுத்தினால் உள்நாட்டில் அரசியல் பொருளாதார நெருக்கடிகள் முற்றும் அபாயம் உள்ளது" என்கின்றனர் ரஷியாவின் புதிய ஜார்கள்.

"50களிலும் 60களிலும் நாம் சோசலிச மறுகட்டமைவு திட்டங்களை மேற்கொண்டிருக்கிறோம். ஆனால் இத் திட்டங்கள் தொடர்ச்சியாக செயல்படுத்தப்படாததால் விரைவிலேயே தோல்வியடைந்தன. இதற்கு நமது முன்னாள் தலைவர்களே பொறுப்பேற்க வேண்டும்."

சுருக்கமாகக் கூறினால், கூட்டுறவுத்துறை, அரசுத் துறை ஆகியவற்றுடன் தனியார் துறையையும் அங்கீகரித்து வளர்ப்பதுதான் பிரஸ்டோரிகா திட்டம். இத்துறைகள் அனைத்தையும் இயங்கியல் முறையில் ஒற்றுமையும் போராட்டமும் என்ற முறையில் சரியாகக் கையாண்டால் சிக்கல் ஏதுமில்லை என்கிறது கோர்ப்பசேவ் கும்பல்.

இந்தியாவின் ஆளும் வர்க்க அரசியல்வாதிகள் இதைக் கேட்டால் விலா நோகச் சிரிப்பார்கள். அரசுத்துறை, தனியார் துறை அனைத்தையும் ஒருங்கிணைந்த முறையில் கையாண்டு சோசலிச இந்தியாவைப் படைத்து வரும் நாங்கள்தான் கோர்ப்பசேவுக்கு வழிகாட்டி என்பார்கள். ஆனால் ருஷிய அடிவருடிகளும் பத்திரிக்கைகளும் இது ஏதோ மாபெரும் திருப்புமுனை; ருஷியப் புரட்சிக்குப் பிறகு தொடரும் இரண்டாவது புரட்சி; தமது சகாப்தத்தின் மகத்தான மனிதர் கோர்ப்பசேவ் என்றெல்லாம் பிதற்றித் திரிகின்றனர்.

பிரஸ்டோரிகா திட்டப்படி இரும்புத் திரையைத் திறப்பது, பொருளாதாரத்தில் தனிநபர் லாப நோக்கை தீவிரப்படுத்துவது, தனியார் துறையை வெளிப்படையாக அங்கீகரித்து ஆதரிப்பது, வெளிநாடுகளில் தனியார்துறை கம்பெனிகளுடன் கூட்டு வைப்பது-இதன் மூலம் உற்பத்தியை முடுக்கிவிட்டு உள்நாட்டு நெருக்கடியை தற்கபலிகமாகத் தீர்ப்பது; இதோடு கோடிக்கணக்கான ரூபாய்களைக் கொட்டியும்கூட விண்வெளிப் போர் யுத்தத்தில் உடனடியாக அமெரிக்காவை விஞ்ச சாத்தியமில்லாத நிலையில், காலத்தையும் மூலதனத்தையும் பெறுவதற்காக சமாதானக் கொடியைத் தூக்கிப் பிடிக்கிறது கோர்ப்பசேவ் கும்பல். இதற்காக ஐரோப்பாவில் குவித்துள்ள குறுந்தொலைவு மற்றும் நடுத்தர தொலைவு ஏவுகணைகளை அகற்றுவதற்காக அமெரிக்காவுடன் ஒப்பந்தம் போட்டிருப்பது, ஆஃப்கானிலிருந்து ரஷிய ஆக்கிரமிப்புப் படைகளை திரும்பப் பெறப் போவதாக அறிவித்திருப்பது—இதன் மூலம் சமாதானக் காவலனாக வேடமிட்டுக் கொண்டு அமெரிக்க மேல்நிலை வல்லரசின் யுத்த முயற்சிகளை அம்பலப்படுத்திக் கொண்டே, மறுபுறம் உலக மேலாதிக்கத்திற்காக நட்சத்திர யுத்தத்தில் அமெரிக்காவை விஞ்சுவது என்கிற உள்நோக்கமே பிரஸ்டோரிகா திட்டத்தின் சாரம்.

இது தற்காலிகமாக நெருக்கடிகளைத் தீர்த்து பிறகு மீண்டெழ முடியாத நெருக்கடி புதை சேற்றில் குப்புறத் தள்ளும் என்பது சர்வதேசப் பாட்டாளிகள் யாவரும் அறிந்த உண்மை. ஆனாலும் நவீனப்படுத்துவது என்ற பெயரில் பழம் பிற்போக்கு முதலாளித்துவ உற்பத்தி எனும் நொண்டிக் குதிரை மீதேறியுள்ளது கோர்ப்பசேவ் கும்பல். பிரஸ்டோரிகாவை தீவிரப்படுத்துவதற்காக இப்போது அரசு மானியங்களைக் குறைக்கவும் முடிவு செய்துள்ளது. 'விலைவாசியை நிலைப்படுத்துவதற்காக கடந்த காலத்தில் வரைமுறையின்றி அரசு மானியம் விரயமாக்கப்பட்டுள்ளது. இது சோசலிச முறைக்கு ஏற்புடையதல்ல. இது பொருளாதாரத்தை வலுவிழக்கச் செய்கிறது' என்று கூறி அரசு மானியங்களையும் சலுகைகளையும் வெட்டியெறிந்துவிட்டது கோர்ப்பசேவ் கும்பல். புதிய பொருளாதாரக் கொள்கை என்ற பெயரில் பாசிச ராஜீவ் கும்பல் மானியங்களையும் சலுகைகளையும் வெட்டி எறிந்தது. இப்போது பிரஸ்டோரிகா என்ற பெயரில் அதையே செய்கிறது கோர்ப்பசேவ் கும்பல்.

படிப்பகம்



கோர்ப்பசேவ் கும்பலுக்கு முன்னோடியாக நாட்டை நவீனப் படுத்துவது என்ற பெயரில் சீனத்தில் ஆளும் டெங் கும்பல் தனியார் முதலாளித்துவத்தை உயிர்ப்பித்துள்ளது. மகத்தான மாசேதுங் சிந்தனையைக் கொச்சைப் படுத்தி முதலாளித்துவ மீட்சிக்கான தனது எதிர்ப்புரட்சி திரிபுவாதத்தை முன் தள்ளி, சோசலிசக் கட்டமைவைச் சிதைத்து நாட்டை ஏகாதிபத்தியங்களுக்கு அடிமைப் படுத்துவதில் முனைந்து நிற்கும் டெங் கும்பல் மௌனமாகவே ஓர் ஆட்சிக் கவிழ்ப்பை அரங்கேற்றியுள்ளது.

கடந்த கால செயல்முறை குறித்த விமர்சனம் என்ற பெயரில் மார்க்சிய— லெனினிய சித்தாந்தம் இன்றைய பிரச்சினைகளைத் தீர்க்க உதவாது’ என்று பகிரங்கமாகவே சாடியது. மாவோவின் படைப்புகளும் சிலைகளும் பொருட்காட்சி சாலைக்குஅனுப்பப்பட்டது. மாவோவின் நூல்களைப் படிப்போர் பழமைவாதிகளாக சித்தரிக்கப்பட்டனர்.

இதோடு டெங் கும்பலின்சீர்திருத்தத்தை ஏற்காத முதுபெரும் கம்யூனிஸ்டுகள்கட்சியிலிருந்தும்ஆட்சியிலிருந்தும் கழித்துக் கட்டப்பட்டனர். மாவோவுடன் தோளோடு தோள் கொடுத்து நீண்ட பயணத்தில் பங்கேற்ற முதுபெரும்ராணுவத் தளபதிகளும், வீரர்களும் பொறுப்பிலிருந்து நீக்கப்பட்டனர். சீன கம்யூனிஸ்ட் கட்சியின் 12வது காங்கிரசில் புதியவர்களைப் பொறுப்பில் அமர்த்துவது என்ற பெயரில் 67 சதவீத பழைய தோழர்கள் கழித்துக் கட்டப்பட்டனர். சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் 66 ஆண்டு கால வரலாற்றில் இந்த அளவுக்கு பெரும் எண்ணிக்கையில் களையெடுப்பு நடத்தப்பட்டதில்லை என்று முதலாளித்துவப் பத்திரிக்கைகளே வியக்கின்றன.

1978லிருந்து படிப்படியாக கட்சியையும் ஆட்சியையும் கைப்பற்றிக் கொண்ட டெங் கும்பல், நாட்டை முன்னேற்றப் போவதாக அறிவித்த நவீன மயக் கொள்கை புறப்பட்ட வேகத்திலேயே புதை குழிக்குப் போனது. அன்னிய மூலதனங்களையும் தொழில் நுட்பத்தையும் கவர்ந்திழுப்பதற்காக நாட்டின் 14துறை முகங்களில் 10 துறைமுகங்களை சுதந்திர வர்த்தகவளையங்களாகத் திறந்துவிட்டது டெங் கும்பல். விரைவிலேயே கூடுதலான அன்னிய மூலதனம் மற்றும் நுகர்பொருள் இறக்குமதியின் காரணமாக சீனத்தின் அன்னியவர்த்தகத்தில் பெருமளவு பற்றாக்குறை ஏற்பட்டது. அன்னியச் செலவாணி கையிருப்பு இல்லாமல் போகவே உலக வங்கியிடம் கையேந்த வேண்டிய நிலை ஏற்பட்டது.

உலக வங்கி உள்ளே நுழைந்த எந்த நாடாவது உருப்பட்டதாக வரலாறு உண்டா? விரைவிலேயே நெருக்கடி முற்றத் தொடங்கியது. ஷென்யாங் மாநிலத்தில் பல ஆலைகள் திவாலாகிப் போய் மூடப்பட்டது. நூற்றுக்கணக்கான ஆலைகளுக்கு லே—ஆப் விடப்பட்டது. பிறகு லாபமில்லாத ஆலைகளை மூடுவது என்று அரசே முடிவெடுத்து தொழிலாளிகளை வீதியில் வீசியெறிந்தது. வேலையின்மை பூதாகரமாக உயர்ந்தது. முதலாளித்துவ சந்தை விதிகளுக்கேற்ப பொருளாதாரம் சிக்கியதால், கள்ளச் சந்தையும் விலையேற்றமும் தீவிரமாகியது. ‘பீப்பிள்ஸ்டெய்லி’ பத்திரிக்கையின் கூற்றுப்படியே, அரசுத் துறையே உற்பத்திப் பொருட்களை கள்ளச் சந்தையில் விற்று ஆறே மாதங்களில் 90 கோடி டாலர் ‘லாபம்’ ஈட்டியுள்ளது. திட்டமிட்ட பொருளாதாரம் என்பதற்குப் பதில் இன்று பற்றாக்குறை பட்ஜெட் என்பதே சீனத்தின் தலைவிதியாகியது. 1986ல் 1900 கோடி டாலராக இருந்த பட்ஜெட் பற்றாக்குறை 1987ல் 2200 கோடி டாலராக அதிகரித்துக் கொண்டே போகிறது.

அரசுத் துறையால் பயனில்லை; நட்டம்தான் ஏற்படுகிறது என்று ராஜீவ் கும்பல் அதைப் புறக்கணித்தபோது இங்கேபோலிக்
கம்யூனிஸ்டுகள் ஒப்பா
வைத்தார்கள். ஆனால் சீனத்தி
டெங் கும்பல் ராஜீவின் கொ
கையை நவீன மயம் என்றபெயரி
நடைமுறைப் படுத்தியது
‘பொருளாதாரம் அரசு கட்டு
பாட்டில் இருப்பதானது பறவை
யைக் கூண்டில் அடைப்பதற்
ஒப்பானது’ என்று வியாக்கியான
கொடுத்தது டெங்கும்பல். இன்னு
ஜனரஞ்சகமாக பூனை கறுப்போ
வெள்ளையோ எலியைப் பிடித்தா
சரி என்று சீனப் பழமொழியை
உதாரணமாகக் காட்டி தனியா
துறை முதலாளித்துவத்தை நியாய
படுத்தியது. சீனாவை ‘மார்க்சி
அமெரிக்காவாக’ மாற்றப் போ
தாக சவடால் அடித்த டெங் கு
பல் வெகு விரைவிலேயே சீனாவை
ஒரு தென்கொரியாவாக சீரழி
துள்ளது.

ஆக, இளைஞர் ராஜீவும்
பெரியவர் டெங்கும், ராஜதந்திரியு
சமாதானக் காவலருமா
கோர்ப்பசேவும் நவீன மயத்தி
குறியாக இருக்கிறார்கள். 21
நூற்றாண்டை நோக்கி முன்னே
வது, புதிய பொருளாதார
கொள்கை, நவீன மயம் என்கிற
பாசிச ராஜீவ் கும்பல். நாட்
நவீனப்படுத்துவது, மாபெரு
பாய்ச்சல், பொருளாதார
திருத்தம் என்கிறது சீனத்தி
டெங் கும்பல். கூடுதல்ஜனநாயக
மறு கட்டமைவு, முன்னேற்ற
கிளாஸ் நாஸ்ட்— பிரஸ்டோ
என்கிறது கோர்ப்பசேவ் கும்பல்.

கொள்கை அறிவிப்புகள்
சொல்லடுக்குகளில் தான் வே
பாடே தவிர அனைவரும் அடி
படையில் ஒரே அலை வரிசையி
தான் பேசுகிறார்கள். அதாவ
ஏகாதிபத்தியங்களின் கூடு
கொள்ளைக்காக கதவை அக
திறப்பது, கிழடு தட்டிப்போ
முதலாளித்துவத்தை ஊட்
வளர்ப்பது, சோசலிசத்தை
அரசுத் துறையை குழிதோண்டி
புதைப்பது என்பதுதான் இவ
களது நவீனமயக் கொள்
நவீனம், துரித வளர்ச்சி என்
பெயரில் அவர்கள் புதிய—மு
னேறிய உற்பத்தி முறைக
முன்னிறுத்தவில்லை. படுட்
போக்கான மரணப் படுக்கை
கிடக்கும் முதலாளித்துவ உற்ப
யைத்தான் கவர்ச்சியாக அரிதா
பூசிக் காட்டுகிறார்கள். தன்மை
படுபிற்போக்காளர்களும் பாசிஸ்
களுமான இவர்களது அகராதி
நவீன மயம் என்பதற்கு தனிய
முதலாளித்துவத்தை உயிர்ப்பித்
ஊட்டி வளர்ப்பதன்றி வே
பொருள் இல்லை. இப்பிற்போ
காளர்களின் கவர்ச்சிகரமா
ஜனரஞ்சக சொல்லடுக்குகளை
கண்டு சர்வதேசப் பாட்டா
வர்க்கம் ஏமாறப் போவ
தில்லை.

○ பால

www.padippakam.com

# நாறுது நாடாளுமன்ற ஜனநாயகம்

மந்திரி திருநாவுக்கரசு சாணியில் உருண்டார்; நெஞ்சில் போலீசு லத்தி வடு. குழந்தைவேலு ஜட்டியுடன் நின்றார், நெடுஞ்செழியன் மேல்துண்டு பறந்தது, எஸ் டி. சோமசுந்தரம் வேட்டியை வழித்து கட்டிக் கொண்டு ஓட்டம், ஜெயலலிதாவின் முதுகிலும் கழுத்திலும் அடி—இன்முகத்துடன் மந்திரி பதவிகளில், கட்சியின் உயர் அதிகார மட்டங்களில் அமர்ந்து கொண்டு தமிழக மக்களுக்கு பொங்கல் வாழ்த்துச் செய்திகளை பறிமாற காத்திருந்த தலைவர்கள், பாவம்! அந்நாளில் கட்சி அலுவலகத்தினுள் கூட நுழைய விடாமல் தடுக்கப்பட்டு சாதாரண அடிமட்ட போலீசிடம் நடுத்தெருவில் உதைபட்டு உறுமிக்கொண்டிருக்க வேண்டிய பரிதாப நிலை.

ராமாவாரம் தோட்டத்து ராணி என்ற முறையில் ஏற்கனவே அதிகார சுவை கண்ட வி.என். ஜானகி, கணவன் இழந்த கையோடு கோட்டையின் மகாராணியாக பட்டம் சூட்டிக் கொள்ள ஆகப்பெரும்பான்மை பலம் இல்லாமல், பேரரசர் ராஜீவிடம் பதவி பிச்சைக் கேட்டு கையேந்த வேண்டிய துர்பாக்கிய நிலை.

அ.தி.மு.க அரசை விமர்சித்த மத்திய உள்துறை துணை அமைச்சர் ப.சிதம்பரத்தையே கடுமையாக விமர்சித்த காளிமுத்து, அருணாசலம் போன்ற 'தன்'மானம் மிக்க அ.தி.மு.க தலைவர்கள் தற்போது தமிழக இ.காங்கிரசு நான்காம் மட்ட தலைவர்களுக்கு எல்லாம் தலையை சொறிய வேண்டிய நிலை. "அ.தி.மு.க ஆட்சியின் குடுமி இப்போது பிரதமர் ராஜீவிடம் உள்ளது" என்று தமிழக இ காங்கிரசு இளைஞர் அணி

நக்கல் செய்தாலும், இவர்கள் நாவடக்கம் காத்தே தீரவேண்டும் என்ற இக்கட்டான சூழ்நிலை.

எம்.ஜி.ஆரின் திடீர் மரணத்தை தாங்கிக்கொள்ள முடியவில்லையே என சோகக் கடலில் குதித்து மக்களை ஏமாற்றிய அ தி.மு.கதலைவர்கள், இன்று விரும்பினாலும் அச்சோகக் கடலில் இருந்து வெளிவர முடியாத சிக்கலான சூழ்நிலை. கட்சியில் வெடித்து கிளம்பியுள்ள குடுமிபிடி சண்டை தீராமல் எங்கே கிடைத்த பதவியும் பறிபோய் விடுமோ என பதறி வெளியுலகுக்கு தெரியாமல் கதறி அழ வேண்டிய நிர்பந்தம்.

லஞ்சம், ஊழல், அதிகாரமுறைகேடு, கட்டாய நிதி வசூல், பிரமிக்க வைக்கும் விளம்பரம், பொது சொத்து சூறையாடல் (குறிப்பாக, நகர்புற புறம்போக்கு நிலங்களை ஆக்கிரமித்தல்) மூலம் பத்தாண்டு காலம் ஊதிபெருத்து பல்கிபெருகிய, அ.இ. அ தி மு.க திடுப்பென மூச்சடைத்து கீழே விழுந்து ஈமொய்த்து நாறுகிறது.

வி.என்.ஜானகி வீரப்பன் கோஷ்டி 90 எம் எல்.ஏக்களை 16 எம்.பிக்களை தம்பக்கமும், ஜெயலலிதா கோஷ்டி 30எல் எல்.ஏக்களை 5 எம்பிக்களை தம்பக்கமும் விலைபேசி வாங்கியிருக்கிறன. நட்சத்திர ஓட்டல்களில் அவர்களை அடை காக்க ஆனசெலவு, எதிர் கோஷ்டியின்கழுகு கண்களிலிருந்து அவர்களை பாதுகாக்க அடிக்கடி இடம்மாற்றவும், கண்காணிக்கவும் ஆனசெலவு, எதிர்கோஷ்டி கும்பலை மிரட்டவும், உதைக்கவும், அங்கிருக்கும் எம்.எல்ஏக்களுக்கு வலைவீசவும் நியமிக்கப்பட்ட குண்டர்களுக்கு ஆன செலவு.

ஒவ்வொரு கோஷ்டியும் தங்கள் பலத்தை நிரூபிக்க நடத்திய திடீர் பொதுக்குழு, செயற்குழு, மாவட்ட மட்டத்திலான கூட்டம் இவற்றுக்கான 'சிறப்பான' ஏற்பாடு. அதற்கு ஆள்பிடிக்ககொடுத்த பணம், ஒவ்வொரு கோஷ்டியும் எதிர்கோஷ்டியின் நடவடிக்கைகள் மீது 'சட்டபடி' எதிர் நடவடிக்கை எடுக்க போலீசு, நீதிமன்றசெலவு, இ.காங்கிரசு தலைமையுடன் தொடர்பு கொள்ள இடைதரகர்களுக்கு ஆன செலவு, ஆதரவு வேண்டி இ.காங்கிரசு தலைமைக்கு செய்யும் 'கைமாறு.'

வி.என் ஜானகி முதலமைச்சர் ஆனதற்கு, அதற்கு வழி செய்த கவர்னர் குரானாவுக்கு, ஜெயலலிதா பொது செயலாளர் ஆனதற்கு, அவர் போலீசிடம் உதைபட்டதற்கு, வாழ்த்து, நன்றி எதிர்ப்பு, கண்டன போஸ்டர்களை தமிழகமெங்கும் ஒட்டியதற்கான செலவு—என ஒவ்வொரு கோஷ்டியும் குறைந்தது 5 கோடி ரூபாயை (ஒரு எம்.எல்.ஏ வின் விலை ரூ 5லட்சம் என தகவல், நெருக்கடிக்கு தக்கவாறு இன்னும் ஏறும் என தகவல்) 500 லட்சங்களை வாரி இறைத்திருக்கின்றன. இதில் ஜெயலலிதா கோஷ்டி தாம்பிடித்து வைத்திருந்த எம் எல்.ஏக்களை ரங்கராட்டினம் மாதிரி விமானத்தில் வைத்துக்கொண்டு சுற்றிக் கொண்டேயிருந்தது (பெங்ளூர், பம்பாய், இந்தூர், விருதுநகர்) இந்த எம் எல் ஏக்கள் நட்சத்திர ஓட்டலில் 'பல அயிட்டங்கள்' இருந்தும் பொழுது போகாமல் ஒருபாயிண்டுக்கு 800 ரூபாய் 'பெட்'கட்டி சீட்டாட்டம் ஆடும் அளவு பணத்தில் மிதந்து இருக்கிறார்கள்.

●

செய்தி தொடர்பு வலைபின்னலை தமிழகம் எங்கும் விரிவுபடுத்தி வைத்துக்கொண்டு, டெல்லி துரித போக்குவரத்துக்கும் வழி செய்துக் கொண்டு, சென்னையில் அமர்ந்திருந்த இரு கோஷ்டிகளின் தலைமை மட்டம் முதலில் சுய விளம்பரத்

ராமாவாரம்தோட்டத்து ராணி என்ற முறையில் ஏற்கன்வே அதிகார சுவை கண்ட வி.என். ஜானகி, கோட்டையின் மகாராணியாக


படிப்பகம்

www.padippakam.com

தில் தத்தம் ஏகபோகத்தை நிறுவ அனைத்து முயற்சியையும் எடுத்தது. அ.தி.முக ஆட்சியிலும், கட்சியிலும் எம்.ஜி.ஆர் வாரிசு யார் என்ற கேள்விகளை எடுபிடி பத்திரிக்கைகளில் முதன்மை செய்தியாக எழுப்பியது.

கவர்ச்சிமிகு சினிமாத்தன விளம்பரத்தில் கொட்டைப் போட்ட ஜெயலலிதாகோவைதம்பி கோஷ்டி கையளவு எம்.ஜி.ஆரின் தாயார் படத்தை பத்திரிக்கை நிருபர்களுக்கு காண்பித்து ''நான், எந்நாளும் அ.திமு.கவிலிருந்து விலக மாட்டேன்'' என்று என்னிடம் தனியாக இப்படத்தில் சத்தியம் வாங்கிக் கொண்டார் எம்.ஜி.ஆர்' 'எம்.ஜி.ஆர் மறைவுக்கு பிறகும் நான் கட்சியின் தலைமை அலுவலகத்திற்குள் செல்வதில் எந்த தடையும் இருக்கக்கூடாது என்பதற்காக, வி.என் ஜானகி பெயரில் இருந்த அந்த கட்டிடத்தை எனக்காககட்சியின் பெயருக்கு வீலை கொடுத்து வாங்கி வைத்தார். அப்போது மாதவன் கூட உடன் இருந்தார்'. 'நான் கட்சி பொறுப்பிலிருந்து விடுவிக்க சொல்லி, ராஜினாமா கடிதத்தை நீட்டிய போதெல்லாம், அவர் மனம் நொந்துபோனார். அம்மாதிரியான சிந்தனையே எனக்கு வரக்கூடாது என அறிவுரை கூறினார். கடைசியில் ஒருமுறை அக்கடிதத்தை வாங்கி வைத்துக் கொண்டுவிட்டார்'' என்று சினிமா வசனம் பேசி எம்.ஜி.ஆரின் உண்மையான வாரிசு நான்தான் என நிரூபித்தார் ஜெயலலிதா.



கவர்ச்சிமிகு சினிமாத்தன விளம்பரத்தில் கொட்டை போட்ட ஜெயலலிதா

வீரப்பன்—வி. என். ஜானகி கோஷ்டி நிலைமையை சமாளிக்க, பெரிய மனதோடு இருப்பதாககாட்டிக் கொண்டது. அடிக்கொருதரம் தன்னுடைய அறிவிப்பு விளம்பரத்தில், கட்சி ஒற்றுமைக்கு நாவலர் நெடுஞ்செழியன் தங்களோடு அருள் கூர்ந்து இணைய வேண்டும் என வேண்டி, வேண்டி கேட்டுக்கொண்டது. அந்த யுக்திபெரிய விளம்பரமாக மாறாததைக் கண்டு, எம்.ஜிஆர். எழுதி வைத்த உயிலை அவிழ்த்து விட்டது. அதில் இருந்த ''என்னுடைய ஒரே வழிமுறை வி. என். ஜானகிதான்'' என்ற வார்த்தையை கெட்டியாகப் பிடித்துக் கொண்டு, அதை வைத்து, எம்.ஜி.ஆரின் உண்மையான வாரிசு, நான்தான் என கண்ணீர் மல்கும் படத்துடன் கையெடுத்து கும்பிட்டபடியே கூறிக் கொண்டிருந்தார் வி. என். ஜானகி.

இத்தனைக்கும் பிறகு ஆகப் பெரும்பான்மையான எம்எல்ஏக்கள் பலத்திற்கு தம் பக்கம் ஆட்கள் கிடைக்காததைக் கண்ட இக்கோஷ்டி, ஒட்டு மொத்தமாக, அதிகார வர்க்க பரிவாரங்களையும் உடன் அழைத்துக் கொண்டு டில்லிக்கு சென்று ராஜீவிடம் பதவி பிச்சை கேட்டு கையேந்தியது.

ஆட்சியை கவிழ்ப்பதிலும், அமைச்சரவையை தேர்ந்தெடுப்பதிலும், அவர் சர்வதேச அறிவுபெற்றிருப்பதால், 'இன்று போய் நாளை வா' என கூறி வழியனுப்பி வைத்துவிட்டு தமிழகத்தில் வதந்தியைப் பரப்புவதற்கு ஆட்களையும், பத்திரிக்கைகளையும் முடுக்கிவிட்டார். அதிமுக கட்சி உடைய கூடாது என்பதில் அவர் கண்ணும் கருத்துமாக இருப்பதாகவும், பிளவுபட்ட கோஷ்டிகளை ஒன்று சேர்த்து அமைச்சரவையில் உட்கார வைக்க அவர் மிகவும் விரும்புவதாகவும்—அதிமுக கோஷ்டி சண்டையில் இ. காங்கிரசு ஆதாயம் அடைய துளி அளவும் விரும்பவில்லை எனவும், ஒருவித கருத்து புகைபோல தமிழகத்தை சூழ்ந்தது. திடலடியாக வி. என். ஜானகியை தேர்ந்தெடுத்ததற்காக, கவர்னர்குரானாவிடம்கூட அவர் விளக்கம் கேட்டிருக்கிறார்; குரானா இதற்காக பதவிநீக்கம்கூட செய்யப்படலாம் என தினசரி பத்திரிக்கைகள் கிசுகிசு சொல்லியது. முதுகெலும்பற்ற பத்திரிக்கைகள் ராஜீவ்காந்திக்கு தர்மபத்தினி வேடம் பூசி தமிழகம் முழுவதும் எடுத்துச் சென்றன.

ஆனால், இ.காங்கிரசு 'கைமாறு' வாங்கிக் கொண்டுதான் வி. என். ஜானகி, ராஜீவை பார்ப்பதற்கே அனுமதித்தது. ராஜீவின் ஈழ ஆக்கிரமிப்பை, வி.என். ஜானகி

## சுட்டால்தான் தெரியுமா நெருப்பு என்று!

'துப்பாக்கியிலிருந்து குண்டு வராமல் பூவா பொழியும்? போலீசிடம் லத்தி இருப்பது மாடு மேய்ப்பதற்கா?'—20 ஆண்டு காலம் தொடர்ச்சியாக மந்திரி பதவி வகித்த நெடுஞ்செழியன் '82ஆம் ஆண்டில் எம்ஜிஆர் அரசு தலைமையிலான போலீசுஆட்சிக்கு வக்காலத்து வாங்கி பேசிய பேச்சு இது. இதே நெடுஞ்செழியன் இப்போது வி.என். ஜானகி—வீரப்பன் எதிர் கோஷ்டியால் பழிவாங்கப்படும்போது, தேவாரம் கும்பல் போலீசால் தாக்குண்டவுடன், ''எங்களது கட்சி அலுவலகத்தினுள் செல்வது எங்களது உரிமை. இதில் ஏதாவது தகராறு ஏற்பட்டால், அதை கவனிக்க கோர்ட் இருக்கிறது. ஆனால், போலீசு இப்பிரச்சினையில் நுழைந்து கட்சி ஊழியர்களை காட்டுமிராண்டித்தனமாக தாக்கியது எதிர்பார்க்காத ஒன்று'' என்று பத்திரிக்கை நிருபர்களிடம் புலம்புகிறார். இந்த 'நடமாடும் பல்கலைக் கழகத்திற்கு' சுட்டால்தான் நெருப்பு என்று தெரியும் போலிருக்கிறது! போலீசார் என்ன மடத்து சாமியார்களா? லத்தியை வைத்துக் கொண்டு மந்திரித்து மனம் திருத்தி அனுப்புவதற்கு!

இதே சூரப்புலிதான், இப்போது சபாநாயகர் பி. எச் பாண்டியன் மீதும் பாய்கிறார். 'கட்சி விரோத நடவடிக்கையில் நீங்கள் ஈடுபடுவதாகவும், அதற்காக, உங்களை அ.தி.மு.க. கட்சியிலிருந்து ஏன் நீக்க கூடாது' என்று வி.என். ஜானகி ஆதரவு எம் எல் ஏ அனுப்பியிருந்த விளக்கம் கோரும் நோட்டீசை வைத்துக் கொண்டு, சபாநாயகர் என்னிடம் பதில் கேட்க உரிமையில்லை' எனசட்டம் பேசுகிறார். திமுக எம் எல் ஏக்களை பி எச் பாண்டியன் வெளியேற்றிய போது மண்ணாகிப்போனவர், இப்போதுதான் மனிதனாக மாறினார் போலும்!



படிப்பகம்

www.padippakam.com

தலைமையிலான புதிய மந்திரி சபைஎம்.ஜி.ஆரைப் போன்று நிபந்தனையற்ற முறையில் ஆதரித்து அறிக்கைவிட்ட பிறகுதான் சந்திப்பே நடந்தது. இதை வெற்றிகரமாக முடிப்பதற்கு ஆர். எம். வீரப்பனும், காளிமுத்துவும் ஏதோ தமிழன பாதுகாவலர்கள் மாதிரியும் வதந்தியைக் கிளப்பி, அவர்களை என்சாண்கிடையாக இ. காங்கிரசு காலில் விழவைத்தது.

இ. காங்கிரசு தலைமை நிர்ப்பந்திக்காவிட்டாலும், வீரப்பன்—காளிமுத்து கோஷ்டி பதவிக்காக அவர்கள் காலில் விழ தயாராகத்தான் இருக்கும், இருந்தது. அப்படியிருந்தும், வாய்சவடால் பேர்வழி—வெண்ணெய் வெட்டி சிப்பாய் கூட தமது கூடாரத்திற்கு தகாது என இ.காங்கிரசு செயல்படுவது தான் இங்கு குறிப்பிடத்தக்க விஷயம்.

ஆபத்தற்றவர்களாக இருப்பதால், வி.என். ஜானகி கோஷ்டியை, இ.காங்கிரசு ஆதரிக்கும் என தெரிந்தவுடன் ஜெயலலிதா கோஷ்டி, கட்சி நம் கையில் இருக்கிறது. ஆட்சியை எப்போது வேண்டுமானாலும் பிடித்துக் கொள்ளலாம் என சுருதியை குறைத்து ராகம் பாட ஆரம்பித்து இருக்கிறது. என்ன இருந்தாலும் கையில் இருக்கும் பதவியை இழக்க விருப்பம் இல்லாமல், ஜெயலலிதா ஆதரவு எம்எல்ஏக்கள் வேலியை தாண்ட நேரம் பார்த்துக் கொண்டிருக்கிறார்கள்.

வி. என். ஜானகி—வீரப்பன் கோஷ்டி ஆட்சிக் கட்டிலை பிடிப்பதில் தற்காலிகமாக பிரகாசமான வாய்ப்போடு மின்னினாலும் அது அணைய போகும் திரியின்பிரகாசம் தான். இப்போதே அதில்கோஷ்டிக்குள் கோஷ்டி முளைத்து தழைத்து வளர்கிறது. வி. என். ஜானகி—இவருடைய முதல் கணவன் வழி முறை உறவினர்கள்—குடும்ப டாக்டர்கள், பாதுகாவலர்கள், செயலாளர்கள், முத்துசாமி, சுலோச்சனா சம்பத், சத்தியவாணி முத்து நடிகை விஜயகுமாரி அடங்கிய அடுபங்கரை ஆலோசகர்கள் ஒரு கோஷ்டி. விலைகொடுத்து வாங்கப்பட்ட எம்எல்ஏக்கள் துணையுடன் வீரப்பன் ஒருகோஷ்டி. மூன்றாவது ப. சண்முகம் கோஷ்டி. இவர்கள் தங்கள் காய்களை ஏற்கனவே நகர்த்த ஆரம்பித்துவிட்டார்கள். வெகு சீக்கிரத்தில் ஒன்றோடு ஒன்று முட்டி மோதிவிடும்.

ஆந்திரா, காஷ்மீர் மாநிலங்களில் ஏற்கனவே முட்டி மோதிய (என்.டி..ஆர்—பாஸ்கர்ராவ்) கோஷ்டி மோதல்களில் அதிகார அப்பத்தை பங்கிட்டு தரும் குரங்கு வேலை பார்த்து ருசிகண்ட, பாசிச இந்திரா—ராஜீவ் கும்பலின் தராசு தட்டு தமிழ்நாட்டுக்கும் வந்துவிட்டது. உரிய நேரத்தில் அது தன் வேலையை ஆரம்பித்து, அதிகார அப்பத்தை விழுங்கி ஏப்பம்விடும்.

ஜனநாயக தொட்டிலானஇந்தியாவின் அமைதி பூங்கா தமிழ்நாடு, இங்கு ஆயாராம், காயாரம்அரசியல் இல்லை. "மக்களின் தீர்ப்பே மகேசன் தீர்ப்பு" என ஆரோக்கியமான ஜனநாயகத்தை கட்டி காத்து அவற்றுக்கு தலை வணங்கும் அரசியல் தலைவர்களை வழிவழியாக கண்டுவரும் மாநிலம்; அரியானா மாநிலத்து ஆயாராம் அரசியலை நோக்கி போகிறதே என இடிந்து போகிறார்கள், ஜனநாயக விரும்பிகளாக வேடம் போடும் முதலாளித்துவ சீர்திருத்தவாதிகள். போலிக் கம்யூனிஸ்ட்டுகளோ எழுந்துள்ள கோஷ்டி மோதல்களை சுமுகமாக தீர்த்துக் கொள்ளும்படி — பாராளுமன்ற, சட்டமன்ற ஜனநாயகத்தை காக்கும்படி, பாசிஸ்ட்டுகளின் பாதம் தாங்கிகளிடம் வேண்டி நிற்கிறார்கள்.

விதிவிலக்கில்லாமல், இவர்கள் அனைவரும் பாசிஸ்ட்டுகளின் பரந்த சமூக அடிப்படையைஎப்படியாவது கட்டிக் காத்து அவற்றுக்கு தொண்டூழியம் செய்வதிலேயே குறியாய் இருக்கிறார்கள்.

அதிமுக ஆதரவு கும்பல்களை சகிக்க முடியாமல் முகஞ்சுளித்துக் கொள்ளுமளவு அக்கட்சியிலும் ஆட்சியிலும் எழுந்துள்ள கோஷ்டி மோதல், பதவிவெறி,அதிகாரத்துக்கான குடுமி சண்டை, அக்கட்சியிலுள்ள தனிநபர்களின் விருப்பு—வெறுப்பை அடிப்படையாக கொண்டதல்ல. பிறப்பிலேயே அராஜகத்தைக் கருக்கொண்டுள்ள பாராளுமன்ற ஜனநாயகத்தின் அராஜகம் முற்றியதன் வெளிப்பாடே இது. இதற்கு, இடைத்தேர்தலோ, மாற்று ஓட்டு சீட்டு அரசியல் கட்சிகளோ தீர்வல்ல. அனைத்து அதிகாரங்களையும் மக்களின் கரங்களின் குவிக்கும் புதிய ஜனநாயகப் புரட்சி ஒன்றே தீர்வு!

● பச்சையப்பன்

## கொள்ளைக்காரர்கள் பெரிய மனிதர்கள் தடியெடுத்தவன் தண்டல்காரன்!

கல்லக்குரிச்சி வட்டம். சங்கராபுரத்தில் எமது விவிமு கொடியை எம்ஜிஆர் இறப்புக்காக, ஒரு கும்பல் பாதியில் இறக்கிவிட்டது. இருந்த சூழ்நிலையை ,கணக்கில் கொண்டு உடனே கொடியை அவிழ்த்து எடுத்துவந்துவிட்டோம். 5 நாள் கழித்து கொடியை ஏற்றிவிட்டு 'பாசிஸ்ட்டுகளின் மரணத்துக்கு செங்கொடி தாழாது' என்று விளக்கமளித்து போர்டு ஒன்று அருகில் வைத்தோம்.

அடுத்த நாள் 29ஆந் தேதி இரவு பக்கத்து ஊர் செம்பராம்பட்டைச் சேர்ந்த பெரிய மனிதன் அண்ணாமலைப் பிள்ளை மகன் இளங்கோ எனும் ரவுடி போர்டை இறக்கி கொளுத்திவிட்டான். அவனின் தூண்டுதலில் சில சமூக விரோதிகள் நடுநிசியில் கொடிக் கம்பத்தை ஒடித்து கீழே தள்ளிவிட்டனர்.

மறுநாள் காலையிலிருந்து நமது தோழர்கள் திரண்டு பெரு முயற்சியெடுத்து அவனைக் கண்டு பிடித்து போர்டு எரித்த இடத்திலேயேபொதுமக்கள்மத்தியில்,தான் செய்த தவறுக்கு வருத்தம் தெரிவிக்கச் செய்தோம். அதனால் ஆத்திர முற்ற ரவுடி தனது ஊரில் நமது அமைப்பைச் சார்ந்த தோழரின் அப்பா, அம்மா, தங்கை ஆகியோரை அன்றிரவே தாக்கியிருக்கிறான்.

மறுநாள் காலை விஷயத்தைக் கேள்விப்பட்டு நமது தோழர்கள் அந்த ஊரில் பஞ்சாயத்தைக் கூட்டி நியாயம் கேட்கச் சென்றனர். சொந்த ஊரிலும் பக்கத்து ஊரிலும் தன்னையும் தன் மகனையும் மிகவும் கேவலப்படுத்திவிட்டதாக மக்கள் மத்தியில் அனுதாபத்தை உருவாக்கி நம்மீது ஆத்திரத்தைமூட்டியிருக்கிறார் 'பெரிய மனிதன்' அண்ணாமலைப்பிள்ளை. அதோடு பணம் சாராயம் ஆகியவற்றைக் கொடுத்து நூற்றுக்கணக்கான அடியாட்களையும் சேகரித்து வைத்திருக்கிறார். பஞ்சாயத்துக்குப் போன நமது தோழர்களை தன் மகனுடன் சேர்ந்து தாக்கியிருக்கிறார்.

அவ்வூரைச் சேர்ந்த நமது தோழரை ஊருக்குள் நுழைந்தால் வெட்டுவேன் குத்துவேன் என அப்பனும் மகனும் சேர்ந்து கூப்பாடு போடுகிறார்கள். வேறு நோக்கத்தில் சிலரும் இவர்களின் வெறியைத் தூண்டிவிட்டுக் கொண்டிருக்கின்றனர்.

இந்த மக்கள் விரோத ரவுடிக் கூட்டத்தை மக்கள் மத்தியில் அம்பலப்படுத்திக் கொண்டிருக்கிறோம். மக்கள் சக்தி ஒன்றுதிரண்டு இந்தக் கயவர்களைப் பழிவாங்கும் நாள் தொலைவிலில்லை.

தகவல்:
விவசாயிகள் விடுதலை முன்னணி,
கல்லை வட்டம்.

படிப்பகம்

www.padippakam.com

புதிய ஜனநாயகம் டிசம்பர்—(16—31) இதழில் ''டாக்டர் அம்பேத்கார்: முதலாளித்துவ சீர்திருத்தவாதியா? புரட்சியாளரா?'' என்கிற கட்டுரைவெளியிட்டிருந்தோம். அதற்காக புதிய ஜனநாயகத்தைக் கடுமையாகச் சாடி சில கடிதங்கள் வந்திருக்கின்றன. இவை போன்ற அவதூறுகள் புதிய ஜனநாயகம் வாசகர்கள் சிலரிடம் பரப்பப்பட்டிருக்கக் கூடும். எனவே அவற்றின் சுருக்கத்தைக் கீழே கொடுத்து பதிலளிக்கிறோம்.

● சாதிவெறி பிடித்த சொறிநாய்கள் கூட்டம் டாக்டர் அம்பேத்கார் எழுதிய Riddles in Hinduism என்ற நூலைத் தீயிட்டுக்கொளுத்திய இந்த நேரத்தில், அந்த வெறிநாய்களுக்கும் எங்களுக்கும் வித்தியாசம் ஒன்றுமில்லை என்று இந்தக் கட்டுரை மூலம் வெளிக்காட்டியுள்ளீர்கள்... பார்ப்பனருக்கு எதிரான கூட்டணியில் பலம் சேர்த்துக் கொள்வதற்கு மேல்சாதி திராவிடக் கட்சிகளினால் ஏற்றுக் கொள்ளப் பட்டவர் டாக்டர் அம்பேத்கார் என்று வெளிப்படுத்தியதன் மூலம் உங்கள் இயக்கம் பார்ப்பனர்களுக்கு விசுவாசிகள், அடிவருடிகள் என்பதை நிரூபித்துள்ளீர்கள்.

பாலகிருஷ்ணன்
'பெல்', ராணிப்பேட்டை

● ...ஒரு தாழ்த்தப்பட்ட மக்களின் தலைவனைத் தாக்கி எழுத உனக்கு எவ்வளவு திமிர்? டேய் கழுதை! நீ புதிய ஜனநாயகம், புதிய கலாச்சாரம் என்றெல்லாம் சொல்லி நாட்டை சீர்திருத்துவதாக நடிப்பது தாழ்த்தப்பட்ட மக்களை ஒடுக்குவதற்குத்தான். அறிவு கெட்டவனே, தே... பெற்ற திருமகனே! ஒரு அப்பனுக்கு நீ பிறந்திருந்தால் ஒரு வழியில் சென்றிருப்பாய். உன்னை மரியாதையாகப் பேச வார்த்தை கிடைக்கவில்லை. இத்துடன் நீ உனது பாணியை மாற்றிக் கொள்!

ராஜாபென் ராணிப்பேட்டை

● ...எங்கள் 'பெல்' தொழிலாளர்கள் மத்தியில் புதிய ஜனநாயகம் நடுநிலையான, தொழிலாளர் நல, மக்கள் நல பத்திரிக்கை என்ற எண்ணத்தை இக்கட்டுரை மூலம் வேரோடு பிடுங்கி விட்டீர்கள். ...உங்கள் தந்தையின் நினைவு நாள் உங்களுக்கு கொண்டாட்ட தினமாக இருக்குமா? எந்த தைரியத்தில் நீலச் சீருடை சிறுத்தைகள் அம்பேத்கார் நினைவு நாளுக்கு ஒன்று கூடுவதை அசிங்கப்படுத்துகிறீர்கள்? சீண்டினால்தான் சீறும் புலி—வித்தியாசமாகப் பார்த்தாலே பாய்ந்துவிடும் சிறுத்தை! வேண்டாம், விபரீதம்! சிறுத்தைகளின் சீற்றத்திற்கு ஆளாக வேண்டாம்.

செல்வராஜ் செயலாளர்
எஸ். சி. யு யு.
பெல்–ராணிப்பேட்டை

● புரட்சி என்றால் என்னவென்று புரிந்து கொள்ளாமல் புதிய ஜனநாயகம் நடத்தும் புத்தி சுவாதீனம் உள்ளவரே! சில்லரைப் புத்தி கொண்டவரே!... உங்களைப் போன்ற சோம்பேறிகள், சிக்காகோவில் தொழிலாளிகள் எட்டுமணி நேர வேலைக்கு உயிரை விட்டார்கள் என்று ஓலமிடுகிறீர்கள். ஆனால் இங்கே இரத்தம் சிந்தாமல் ஒரு நாளைக்கு எட்டு மணி நேர வேலையும், வாரத்தில் ஒருநாள் ஓய்வும் சட்டத்தின் மூலம் பெற்றுத் தந்தவர் டாக்டர் அம்பேத்கார்... இவ்வாறெல்லாம் சட்டம் எழுதிவிட்டு 'இந்த அரசியல் சட்டம் நல்லதுதான். ஆனால் அதை நடைமுறைப்படுத்துபவர்கள் கெட்டவர்களாக இருந்தால் சட்டமும் கெட்டுவிடும்' என்றார். ஜாதி வெறி பிடித்த ஆதிக்க வாதிகள் ஆளும் போதும் ஆண்டபோதும் நடந்த கொடுமைகளைப் பற்றி சொல்லாமல், சட்டம் எழுதியவரை நீ எப்படி குறைத்து மதிப்பிடுகிறாய்?... ஏற்கனவே சாதி இந்து ஆதிக்க வெறியர்களால் தாழ்த்தப்பட்ட மக்கள் கனன்று கொண்டிருக்கிறார்கள். அதிலே உங்களைப் போன்ற கூட்டம் எண்ணெய்யை ஊற்றப் பார்க்கிறது. அந்தத் தீயில் நீயே பொசுங்கி விடுவாய்!

லோகநாதன் ராணிப்பேட்டை

● எங்களுக்கென்று ஒரு விஞ்ஞானபூர்வ பாதை. அதில் அம்பேத்காரின் சில முக்கிய வழிகாட்டுதலையும் பயன்படுத்துவோம். ஏனெனில் அவரது பட்டறிவில் உருவானவை அவைகள். எதிர்வரும் காலங்களில் உங்களின் சுயரூபம் வெளிவரும். எங்களுக்கு உங்களால் எந்த பயனும் ஏற்படப் போவதில்லை.

காமராஜ் கடலூர் துறைமுகம்

● ...மீண்டும் இதுபோல் வெளியிடும் அரிப்பு ஏதாவது இருந்தால் டாக்டர் அம்பேத்காரின் முழுமையான வாழ்க்கையைத் தெரிந்து கொண்டு வெளியிடு. உள்ளூர் தலைவனாக நினைத்து எழுதினால் பின்வரும் விபரீதங்களை நீ எதிர் கொள்ள நேரிடும். எச்சரிக்கை!

முனுசாமி காட்பாடி

● உன் மனப்போக்கு மாறவில்லையென்றால் எங்களால் அடக்கப் படுவது உறுதி. இதைக் கண்டவுடன் மன்னிப்பு அறிக்கை எழுது!

நல்லதம்பி பாண்டிச்சேரி

● ஏ, அற்பப் பதரே! சிகரத்தைப் பற்றி விமர்சிக்க உனக்கு என்ன யோக்யதை இருக்கிறது? அடங்கி கிடக்கும் எங்கள் உணர்ச்சிகளைத் தூண்டி வெறியர்கள் ஆக்கி விடாதே!

வெறியுடன்–முத்து, நெசல்

● எம் தலைவனையும் எம் மக்களையும் பழித்தால் நீ அழிந்து போவாய். மடைய மதியழகா, இத்துடன் நீ எழுதும் வேலையை விட்டு விட்டு பன்றி மேய்க்கச் செல்! இதுதான் நான் சொல்லும் அறிவுரை.

ஸ்ரீதர் 'பெல்', ராணிப்பேட்டை

# விமர்சனமா? வெறியா?

● இந்தியாவின் அரசியல் சட்டத்தை இயற்றிய மாமேதையைப் பார்த்து சாடுகிறாயே! கழுதையே. நீ ஒரு தகப்பனுக்குப் பிறந்தவனா? ...இந்தியாவை எப்படி நிர்வகிக்கப் போகிறீர்கள் என்று லண்டன் வட்டமேசை மாநாட்டில் ஆங்கிலேயர்கள் கேட்டார்கள். அப்போது பல பெரிய தலைவர்கள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்து அசடு வழிந்தபோது, டாக்டர் அம்பேத்கார் நிர்வாக திட்டக் குறிப்பை ஒரு மணி நேரத்தில் தயாரித்து ஆங்கிலேயனை அசத்தியவர். இப்படிப்பட்ட மாமேதையை விமர்சிக்க நீ யார்? நீ கீழ்ப்பாக்கத்தில் சேர வேண்டியவன். மீண்டும் இதுபோல் செய்தி வெளியிட்டால் உன்னை சும்மாவிட மாட்டோம்.

மாஜி வாசகன்
'பெல்', ராணிப்பேட்டை

பழைய—புதிய நிலப்பிரபுக்கள்—சாதிய அமைப்புமுறை உட்பட பழைய, பிற்போக்கான முறைகளினால் இந்த நாட்டின் உழைக்கும் மக்களை அடக்கி ஒடுக்கிச் சுரண்டுபவர்கள். தரகு அதிகாரவர்க்க முதலாளிகள்—அந்நிய ஏகபோக முதலாளிகளுடன் கூட்டுச் சேர்ந்து இந்த நாட்டைக் கொள்ளையிடவும், பல்வேறு ஏகாதிபத்தியங்கள் ஆதிக்கம் செலுத்தவும் துணை போகும் துரோகிகள். இவர்களின் சர்வாதிகாரம்தான் இங்கு நிலவுகிறது இந்தச் சர்வாதிகாரத்துக்கான ஆட்சி வடிவம்தான் நாடாளுமன்ற ஜனநாயக அமைப்பு.

நாடாளுமன்ற ஜனநாயக ஆட்சியின் தலைமை உறுப்பாக மந்திரி சபைகள் இருப்பினும், உண்மையில் நாட்டை ஆளுவது அதி



படிப்பகம்

www.padippakam.com



காரவர்க்கம், இராணுவம், போலீசு, 'நீதி'மன்றங்கள் மற்றும் சிறைச் சாலைகள் அடங்கிய அரசு இயந்திரமே. அரசு இயந்திரத்தில் பங்கேற்பவர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களோ, மக்களுக்குப் பதில் சொல்லவேண்டியவர்களோ, மக்களின் நலன்களைப் பிரதிநிதித்துவப் படுத்துபவர்களோ அல்ல. சட்ட திட்டங்களை அமுல்படுத்தும் அதிகாரம் அனைத்தும் இந்த அரசு இயந்திரத்திடம் மட்டுமே உள்ளது. மக்கள் 'பிரதிநிதிகள்' எவரும் இதன் நிர்வாக வேலைகளில் குறுக்கிட முடியாது; குறுக்கிடாதவாறு பலாத்காரமாகத் தடுக்கவும் முடியும்.

தீண்டாமை—சாதிய ஒழிப்பு, வரதட்சிணை—விபச்சாரம் முதலிய பெண்ணடிமைத்தன ஒழிப்பு, நில உச்சவரம்பு, 90 நாட்கள் உழைக்கும் தொழிலாளியை நிரந்தரமாக்குவது, குறைந்தபட்சம் ஊதியம்—போனசு, இப்படிப்பல சீர்திருத்தச் சட்டங்கள் இருப்பினும் அதிகாரவர்க்கம், இராணுவம், போலீசு, "நீதி"மன்றங்கள், சிறைச்சாலைகள் அடங்கிய அரசு இயந்திரம் அவற்றை அமுலாக்குவதில்லை. இந்தச் சீர்திருத்தங்கள் அனைத்தும் நாடாளுமன்ற ஜனநாயக ஆட்சிமுறையைக் காக்கவும், ஒட்டுப்பொறுக்கவும் கொண்டு வரப்பட்டன. சட்டம் இயற்றுபவர்களுக்கு இது நன்கு தெரியும். எனவே காகிதத்தில்என்ன இருப்பினும், பழைய, பிற்போக்கு முறைகளினாலும், நவீன அடக்குமுறைகளினாலும் நிலப்பிரபுக்கள் மற்றும் தரகு அதிகார முதலாளிகளின் சர்வாதிகாரம் தொடர்கிறது.

அரசு இயந்திரத்தோடு நாடாளுமன்ற ஜனநாயக ஆட்சிமுறையையும் தரகு அதிகார முதலாளிகள் மற்றும் நிலப்பிரபுக்களின் சர்வாதிகாரத்தையும் பலாத்காரமான முறையில் தூக்கியெறிந்து விட்டு உழைக்கும் மக்களின் சர்வாதிகாரத்தையும், புதிய ஆட்சி—அரசு அமைப்பு முறையையும் நிறுவுவதுதான் புரட்சி. கிராமங்களிலும் நகரங்களிலும் அனைத்து உழைக்கும் மக்களும் ஆயுதமேந்திய மக்கள்படை—போலீசு, தேர்ந்தெடுக்கப்பட்ட நீதிமன்றங்கள்—சிறை நிர்வாகம், தொழில், விவசாயம் உட்பட உற்பத்தி மற்றும் நிர்வாக அதிகார உரிமை முழுக்கவும் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் கமிட்டியிடம் இருப்பது என்கிற ஆட்சி முறை. இதன் மூலம் சட்டம் இயற்றவும் திட்டங்களை அங்கீகரிக்கவுமான அதிகாரம் மட்டுமே உடைய நாடாளுமன்ற, சட்டமன்ற மற்றும் உள்ளூராட்சி அமைப்புகள் ஒருபுறமும், அவற்றை அமுலாக்கவும் உண்மையில் நாட்டை ஆளவுமான அரசு இயந்திரம் மறுபுறமும் என்கிற சர்வாதிகாரத்தை ஒழிப்பது—இதுதான் அரசியல் புரட்சி.

ஒரு அரசியல் புரட்சியின்மூலம் உழைக்கும் மக்கள் அதிகாரத்தைக் கைப்பற்றுவதன் மூலமாகவே சாதிய அமைப்புகளை ஒழித்து தாழ்த்தப்பட்ட மக்களை விடுவிப்பது, நிலச்சீர்திருத்தம், உட்பட சகலவிதமான அடிப்படை மாற்றங்களையும் செய்யமுடியும். இப்படிப்பட்ட புரட்சி வழியிலேதான் 1945—48 தெலிங்கானா பேரெழுச்சியின் போதும், 1967 நக்சல்பாரி பேரெழுச்சிக்குப் பிறகும் உழைக்கும் மக்களின் சர்வாதிகாரத்தை நிறுவுவதற்குக் கம்யூனிசப் புரட்சியாளர்கள் போராடுகிறார்கள்.

ஆனால் அம்பேத்காரும் பெரியாரும் நன்கு தெரிந்தே அரசியல் புரட்சி வழியை மேற்கொள்ளவில்லை. பிரிட்டிஷ் காலனிய மற்றும் நிலப்பிரபுத்துவ சர்வாதிகாரத்தையோ, பிறகுவந்த தரகு அதிகாரமுதலாளிகள் நிலப்பிரபுக்களின் சர்வாதிகாரத்தையோ தூக்கியெறிந்து உழைக்கும் மக்களின் சர்வாதிகாரத்தை நிறுவுவது அவர்களுடைய நோக்கமாக ஒருபோதும் இருந்ததில்லை. அரசியல் புரட்சி தங்களின் நோக்கமல்ல, சமுதாய மாற்றமே நோக்கமென்று வெளிப்படையாக அறிவித்தார்கள். அதாவது தாழ்த்தப்பட்ட மற்றும் பிற்பட்ட மக்கள் கல்வி—வேலை வாய்ப்பு—தேர்தல்களில் இட ஒதுக்கீடு பெறுவதன் மூலம் சில பதவிகளைப் பெற்று சமூக ரீதியாக முன்னேறி சமுதாய மாற்றம் காண முடியும் என்று நம்பினார்கள். இதன் விளைவாக ஏற்கனவே உள்ள சர்வாதிகாரத்தின் கீழ், அதன் ஒரு அங்கமாக அதிகாரவர்க்கம், இராணுவம், போலீசு, நீதிமன்றங்கள்

சாதியத்தையும், தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இழைக்கப்படும் சமூகக் கொடுமைகளையும் உறுதியுடன் எதிர்த்துப் போராடி வருகின்றன, புதிய ஜனநாயகமும், அது ஆதரிக்கும் இயக்கங்களும். இந்தப் பத்திரிக்கையும், இதன் தோழமை இயக்கங்களையும் தொடர்ந்து கவனித்து வரும் எவரும் இதை மறுக்க முடியாது.

ஆனால் அம்பேத்கார் பற்றிய ஒரு விமர்சனக் கட்டுரையைப் பார்த்த மாத்திரத்திலேயே சாதிகளை உதறி விட்டு வந்த எம்மை சாதி வெறியர் என்றும், தாழ்த்தப்பட்ட மக்களின் எதிரி என்றும் இவர்கள் ஆத்திரம் கொள்கிறார்கள். அம்பேத்காரின் கொள்கைகளும்வழிமுறைகளும், நடவடிக்கைகளும் ஏன் சாதியத்தை ஒழிக்காது, தாழ்த்தப்பட்ட மக்களை விடுதலை செய்யாது என்கிறஎமது கட்டுரையின்மீது இந்தக் கடிதங்களில் சிறு அளவு விமர்சனம்கூட இல்லை. மாறாக அம்பேத்கார் விமர்சனங்களுக்கு அப்பாற்பட்ட தெய்வம், அவரை விமர்ச்சிக்க எமக்கு என்ன அருகதை இருக்கிறது? என்று திடலடியாக சாடுகின்றன. இது இவர்களுடையபலவீனத்தையும்அறியாமையையுமே குறிக்கிறது.

அம்பேத்காரை ஏற்காத எவரும், தாழ்த்தப்பட்ட சாதிக்காரன் அல்லாத எவரும் சாதியத்தை ஒழிக்கவும், தாழ்த்தப்பட்ட மக்களின் விடுதலைக்கும் பாடுபட முடியாது. என்று இவர்கள் கருதுகிறார்கள். இவர்கள் ஒரு சிலர் மட்டும் அரசு சலுகைகளைப் பெற்று "வேலையும் காசும்" கண்டவுடன் தாழ்த்தப்பட்ட மக்கள் அனைவரும் "முன்னேறி விட்டதாக" அம்பேத்கார் அதை சாதித்து விட்டதாக அதை கருதி விடுகிறார்கள். இவர்களைச் சுற்றிதாழ்த்தப்பட்ட மக்களுக்கு எதிராக, அன்றாடம் நடக்கும் ஆயிரத்தெட்டு கொடுமைகளுக்கெதிராக இவர்களுடைய கோபமும் ஆத்திரமும் திரும்பவில்லை. அவற்றைச் சகித்துக் கொள்கிறார்கள்.

தாங்கள் தெய்வமாக மதிக்கும் அம்பேத்காரைவிட தங்களின் பிழைப்புவாத சாதிய சங்கத் தலைவர்களை அம்பலப்படுத்துகிறார்களே என்கிற கோபமும் ஆத்திரமுமே அதிகமாகத் தெரிகிறது.

அம்பேத்கார் நினைவுநாளன்று அவரது சிலைகளுக்குமாலை அணிவிக்க வந்த சாதியப் பிழைப்புவாதிகள் சிலரை நேரில் பார்த்தபிறகு தான் "புத்தாடை அணிந்துகொண்டாடியதாக" எழுதினோம். தாழ்த்தப்பட்டமக்களை இவர்கள் எப்படி ஏய்க்கிறார்கள் என்கிற அக்கறையிலிருந்துதான் அது எழுதப்பட்டது

அம்பேத்காரின் நினைவு நாள், கட்டுரையாளரின் கவனக் குறைவினால் நேர்ந்த தவறுதான்! ஆனால் இந்தத் தவறே அம்பேத்கார் பற்றிய விமர்சனங்கள் அனைத்திலும் இருப்பதாகக் கண்ணை மூடிக் கொள்வது கடிதம் எழுதியவர்கள் தங்களைத் தாங்களே ஏமாற்றிக் கொள்வதாகும்.

படிப்பகம்

www.padippakam.com

மற்றும் சிறைச்சாலைகளிலும், நாடாளுமன்ற ஆட்சியிலும் சில பதவிகளைத் தாழ்த்தப்பட்ட மற்றும் பிற்பட்ட சாதி நபர்கள் பெற முடிந்தது. அதாவது உழைக்கும் மக்களை அடக்கி ஒடுக்கும் சுரண்டும் ஆளும்வர்க்க சர்வாதிகாரத்துக்கு சேவை செய்யும் அரசு இயந்திரத்தின் உறுப்புக்களாக, புதிய சாதியில் சேர்ந்தனர். எனவே பெரியாரும் அம்பேத்காரும் கனவுகண்ட சமுதாய மாற்றம் பலிக்கவில்லை.

போலிக் கம்யூனிஸ்டுகளோ, சமுதாய ஏற்றதாழ்வுகளுக்கு அடிப்படை காரணம் பொருளாதார ஏற்றதாழ்வுதான். எனவே சமுதாய மாற்றத்துக்கு முன்பு பொருளாதார மாற்றம் ஏற்படவேண்டும் என்று கூறி பெரியாரையும் அம்பேத்காரையும் விமர்சித்தனர். இந்த இரண்டு தரப்பினருமே அரசியல் மாற்றம்—அரசியல் புரட்சியைப் புறக்கணித்தனர். சமுதாய மாற்றம், பொருளாதார மாற்றம், கலாச்சார மாற்றம் எதுவானாலும் ஏற்கனவே உள்ள சர்வாதிகாரத்தைத் தூக்கியெறிந்து உழைக்கும் மக்கள் அரசியல் அதிகாரத்தைக்கைப்பற்ற வேண்டும்.அது நாடாளுமன்ற ஜனநாயக அமைப்பு—தேர்தல் முறைகளினால் முடியாது. ஏனெனில் இந்த முறைகளினால் வரும் சமுதாய, பொருளாதார, கலாச்சார அடிப்படைமாற்றம்எதையும் பலாத்காரமாக அடக்கி ஒடுக்குவதற்காகவே அரசு இயந்திரம் இருக்கிறது. அரசு இயந்திரம்என்ற இந்தச் சாதியை,இந்தப்பெரும் சுமையை, ஒட்டுண்ணியை,இந்த அரக்கனை, இந்தபலாத்காரத்தைத் தூக்கியெறியாமல் எதையும் சாதிக்க முடியாது.

ஆனால் அம்பேத்கார் அதை எதிர்த்ததோடு, ஆரம்பத்திலிருந்தே அமெரிக்க—இங்கிலாந்து பாணியிலான ஆளும்வர்க்க சர்வாதிகாரத்தைக் கொண்ட நாடாளுமன்றஜனநாயகத்தையே ஏற்றுக்கொண்டார். அப்படிப்பட்ட ஆட்சிமுறைக்கான அரசியல் நிர்ணய சட்டத்தை உருவாக்கியதற்காக அம்பேத்காரோ அவருடைய கட்சியினரோ பெருமைப்படுவார்களே யானால் அவர்களுக்காக நாம் பரிதாபப்படுவதைத் தவிர வேறெதுவும் செய்ய முடியாது. அம்பேத்கார் உருவாக்கிய சட்டங்கள் சரியாகவே இருக்கின்றன, பிறகு வந்தவர்கள் அதை அமுல்படுத்தவில்லை, அல்லது அமுல்படுத்திய முறை தவறு என்று வாதிடுவது அவர்களுடைய அரசியல் அறியாமையையே குறிக்கிறது அமெரிக்க—இங்கிலாந்து பாணியிலான ஆட்சிமுறையின்கீழ் நிர்வாக அதிகாரமுடைய அரசு எந்திரம் எப்படி இயங்கும் என்பதை அம்பேத்கார் அறிந்தே இருந்தார்.

பழைய, நிலப்பிரபுத்துவ சமுதாயத்தின் சாதியக்கொடுமைகளை அம்பேத்கார் வெறுத்தார். அதை ஒழிப்பதற்கான மாற்றுத் தீர்வு சோசலிச—கம்யூனிச சமுதாய, பொருளாதார, கலாச்சார அமைப்புகளில்தான் உண்டு என்பதை அவர் ஏற்கவில்லை. அதற்காக உழைக்கும் மக்கள் (தாழ்த்தப்பட்ட மக்களில் ஏறக்குறைய அனைவருமே உழைக்கும் மக்கள். அவர்களோடு பிறசாதி உழைக்கும் மக்களும் இணையும்போது மட்டுமே சாத்தியமாகும்) சர்வாதிகாரத்தை நிறுவுவதற்கான புரட்சியாளராக அம்பேத்கார் இல்லை.

அதற்குமாறாக பழைய சாதியக் கொடுமைகள் இல்லாத அமெரிக்கா—இங்கிலாந்து நாடுகளில் தான் கண்டதைப் போன்று தொழிலாளர்களிடையே நிலவும் சமத்துவம்—உரிமைகள் இருந்தாலே போதும் என்று அம்பேத்கார் நம்பினார். (அங்கும் நிறவெறி—இனவெறி ஒருபகுதிஉழைக்கும் மக்களை அடிமைகளாக்கியுள்ளது என்பதை அவர் காணத் தவறிவிட்டார்). அதற்காக ஏற்கனவே உள்ள அரசியல் அமைப்பின் கீழ் இட ஒதுக்கீடு, சாதி—தீண்டாமை ஒழிப்பு முதலிய சீர்திருத்தங்களுக்காகப் போராடினார். எனவேதான் அம்பேத்கார் புரட்சியாளரல்ல, முதலாளித்துவ சீர்திருத்தவாதி என்கிறோம். சுருக்கமாகச் சொன்னால் புரட்சிகரமான முறையில் அரசியல், சமூக, பொருளாதார, கலாச்சார மாற்றத்துக்காக அம்பேத்கார் நிற்கவில்லை. தாழ்த்தப்பட்ட மக்கள் சில உரிமைகளும்—சலுகைகளும் பெற்று, பழைய நிலப்பிரபுத்துவ சாதியக் கொடுமைகளிலிருந்து விடுபட்டு, முதலாளித்துவ நாடுகளில் தொழிலாளர்கள் வாழுவதுபோன்று சீர்திருந்தினாலே போதும் என்று நம்பினார். அதற்காகத்தான் போராடினார்.

நிலப்பிரபுத்துவ ஒடுக்குமுறைக்கு எதிராக தாழ்த்தப்பட்ட மக்கள் பெரும்பான்மையாகத் திரண்ட தெலிங்கானா புரட்சியை ஒடுக்குவதற்கு இராணுவத்தை ஏவிய நேருவின் அரசியல் சட்ட அமைச்சராக இருந்த அம்பேத்கார் அதை எதிர்க்கவில்லை. ஏனெனில் சட்டபூர்வ சலுகைகளில் மட்டுமே அவருக்கு நம்பிக்கையிருந்தது. "கற்பி, அணிசேர், கிளர்ச்சி செய்" (Educate, Organise, Agitate) என்றுதான் அம்பேத்கார் சொன்னார். இன்று "புரட்சி" பிரபலமாகிவிட்டதால் "கற்பி, அணிசேர், புரட்சி செய்" என்று பின்னால் வந்தவர்கள் திரித்துக் கொண்டார்கள்.

—ஆசிரியர்குழு
—புதிய ஜனநாயகம்

# ஓடுகாலிகளின் அவதூறுக்கு மறுப்பு!

ஓடுகாலிகளான மனஓசை-கேடயம் கும்பலின் அரசியல் ஓட்டாண்டித்தனம் அம்பலமானதைத் தொடர்ந்து, அவர்களது அமைப்புகள் வேகமாக சரிந்து கொண்டிருக்கின்றன. வெறுமனே ஊதிப் பெருக்கிக் காட்டும் உத்தியும்கூட அணிகளைத் தக்க வைத்துக் கொள்ள அவர்களுக்கு உதவவில்லை. எனவே புரட்சிகர அமைப்புகளுக்கு எதிராக அவதூறு செய்வதன் மூலம் சரிவுக்கு முட்டுக் கொடுத்துவிட முடியும் என்கிற பழைய உத்திக்குத் திரும்பியிருக்கிறார்கள். ஈழப் பிரச்சினையில் 'புதிய ஜனநாயகம்' ஏதோ சந்தர்ப்பவாத நிலைப்பாடுகள் எடுத்ததாக கேடயம் (ஜனவரி 1—15) இதழில் அவதூறு செய்திருக்கிறார்கள்.

● திரும்பத் திரும்ப ஒரு பொய்யைச் சொல்லுவதன் மூலம் அதை உண்மையாக்கிவிடும் கோயபல்சு முயற்சியை ஓடுகாலிகள் மேற்கொள்ளுகிறார்கள். இலங்கையில் ஈழத் தமிழரும் சிங்களவரும் தனித்தனியே புதிய ஜனநாயகப் புரட்சி நடத்தவேண்டுமென்று நாம் திட்டம் வைப்பதாக நமது மேற்கோள் ஒன்றைப் பிய்த்துப் பிய்த்து அர்த்தப்படுத்தி திரித்துச் சொல்லி நம் மீது இனவாத முத்திரை குத்த முயலுகிறார்கள். இதை நாம் பல முறை மறுத்தாகிவிட்டது. முதலாளிய, குட்டி முதலாளிய ஈழப் போராளி அமைப்புகள் தனி ஈழ நாட்டுக்கான திட்டம் வைத்துப் போராடுகின்றன. இலங்கை புதிய ஜனநாயகப் புரட்சியே மார்க்சிய—லெனினியத் திட்டம்; அதற்காகப் போராடும் போதே, முதலாளிய, குட்டி முதலாளியப் போராளி அமைப்புகளின் பிரிந்து போகும் உரிமையுடன் கூடிய சுயநிர்ணய உரிமைக்கான கோரிக்கையை ஆதரிக்க வேண்டியது மார்க்சிய-லெனினியக் கடமை. இலங்கை புதிய ஜனநாயகப் புரட்சித் திட்டம் மற்றும் சுயநிர்ணய உரிமைக்கான கோரிக்கை போராட்டத்தை ஆதரிப்பது, அங்கீகரிப்பது என்கிற இரண்டையும் எதிரெதிரே ஓடுகாலிகள் நிறுத்திவிட்டு நாம் ஏதோ புரட்சிவாதம் மற்றும் இனவாதம் இரண்டும் பேசுவதாக புளுகுகின்றனர்.

● அதேபோல, இலங்கை புதிய ஜனநாயகப் புரட்சி என்கிற யுத்த



படிப்பகம்

www.padippakam.com




தந்திர ரீதியிலான திட்டமும் முழக்கமும் இருக்கும்போதே ராஜீவ்—ஜெயவர்த்தனே ஒப்பந்தத்திற்குப் பிறகு, இந்திய இராணுவ ஆக்கிரமிப்பு மற்றும் போர் தொடங்கிய பிறகு இலங்கையின் வர்க்க—அரசியல் சக்திகளின் சேர்க்கையில், நிலைப்பாடுகளில் முக்கியமான மாற்றம் நிகழ்ந்துள்ளது. பருண்மையான நிலைமைகளில் ஏற்படும் மாற்றத்துக்கேற்ப தந்திரோபாய ரீதியில் புதிய நிலைப்பாடுகள் வகுக்க வேண்டியுள்ளது. ஒப்பந்தம்-ஆக்கிரமிப்புக்கு முந்திய நமது நிலைப்பாடுகளையும் பிந்திய நிலைப்பாடுகளையும் ஓடுகாலிகள் எதிரெதிரே நிறுத்தி நாம் ஏதோ சந்தர்ப்பவாதமாகப் பேசுவதாக புளுகுகிறார்கள்.

● ஒப்பந்தம், ஆக்கிரமிப்புக்குப் பிறகு விடுதலைப்புலிகள் உட்பட ஈழப் போராளி அமைப்புகளின் நிலைப்பாடுகளிலும், ஜே. வி. பி. உட்பட சிங்கள அரசியல் கட்சிகளின் நிலைம்பாடுகளிலும், எல்லாவற்றுக்கும் மேலாக சிங்கள, ஈழ மக்களின் நிலைப்பாடுகளிலும் முக்கிய மாற்றம் நிகழ்ந்துள்ளது. எனவே யுத்த தந்திர ரீதியில் ஈழ—சிங்கள மக்களின் ஐக்கியப்பட்ட புதிய ஜனநாயகப் புரட்சி திட்டத்திற்காக நிற்கும் அதே சமயம் பருண்மையான நிலைமைகளுக்கேற்ப தந்திரோபாய நிலைப்பாடுகள் மாறுகின்றன. யுத்த தந்திர திட்டத்தையும் தந்திரோபாய நிலைப்பாடுகளையும் ஓடுகாலிகள் எதிரெதிரே நிறுத்தி நாம் ஏதோ சந்தர்ப்பவாதமாகப் பேசுவதாச புளுகுகின்றனர்.

புதிய ஜனநாயகத்தில் 1986 இலும், 1987இலும் எழுதிய இரண்டு கட்டுரை மேற்கோள்களைப் போட்டு ஈழத் தமிழ்—சிங்கள மக்கள் ஐக்கியம் பற்றி நாம் ஏதோ சந்தர்ப்பவாதமாக பேசுவதாகப் புளுகிறார்கள். அந்த மேற்கோள்களிலேயே சொல்லப்பட்டிருக்கும் நிலையில் தமிழ்—சிங்கள மக்கள் ஐக்கியம் பற்றி ஓடுகாலிகள் காண்பது கனவுதான். ஒப்பந்தம், ஆக்கிரமிப்புக்குப் பிறகு, தமிழ்—சிங்கள மக்கள் இணையவேண்டிய அவசியமும், கட்டாயமும், நேரமும் பற்றி நாம் வலியுறுத்துவது சந்தர்ப்பவாதமல்ல. நிலைமைகளில் ஏற்பட்ட மாற்றமே காரணமாகும்.

பருண்மையான நிலைமைகளுக்கேற்ப தந்திரோபாய அரசியல் நிலைப்பாடுகளின்றி யுத்த தந்திர முழக்கத்தை மட்டும் குத்திரமாகச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள் ஓடுகாலிகள். இந்த ஓட்டாண்டித்தனத்தையே தமது எப்போதும் சரியான சந்தர்ப்பவாதமற்ற நிலைப்பாடாக வேறு பீற்றிக் கொள்கிறார்கள்.

● பருண்மையான நிலைமைகளில் வர்க்க அரசியல் சக்திகளின் சேர்க்கையில் ஏற்பட்ட மாற்றத்துக்கேற்ப விடுதலைப் புலிகள், ஜே. வி. பி பற்றிய அணுகுமுறை மாற வேண்டும் என்று நாம் எழுதினோம். இதை, அப்படி இந்தியாவில் ஏதும் நிகழாமல், கிருஷ்ணய்யர் பெர்ணாண்டஸ் போன்றவர்களின் சந்தர்ப்பவாத வேஷங்களை நம்பும்படி ஓடுகாலிகள் பின்பற்றும் அணுகுமுறையோடு வெட்கமின்றி ஒப்பிட்டு மகிழுகிறார்கள்.

● இலங்கைப் புரட்சிகர சக்திகளின் நிலைமை — செயல்பாடுகள் பற்றி ஓடுகாலிகள் குறிப்பிடும் அமைப்புகள் நம்மிடம் நேரில் கொடுத்த, ஒப்புக் கொண்ட செய்திகள் அடிப்படையிலானவையே. மற்றபடி அவர்களின் அறிக்கைகளைப் படிக்காமலோ, அதிமேதாவித்தனமாகவோ புதிய ஜனநாயகம் குற்றம்சாட்டவில்லை.

—ஆசிரியர் குழு

# வாசகர் கடிதம்

மதிப்பிற்குரிய ஐயா,

நான் கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக துக்ளக் வாசித்து வருபவன். துக்ளக்கை பெரிதும் மதிப்பவன். தமிழகத்தின் சில பத்திரிகைகளான குமுதம், ஆனந்தவிகடன், கல்கி போன்றவற்றை பத்திரிகைகளே அல்லவென்றும், ஜுனியர் விகடன், தராசு போன்றவற்றை அரைகுறையான பத்திரிக்கைகள் (பாதி நிறையாகவும், பாதி குறையாகவும் எழுதும், காசை மட்டுமே குறிக்கோளாகக் கொண்ட பத்திரிகைகள்) என்றும், துக்ளக்கை முழுமையானதொரு நல்ல பத்திரிகை என்றும் நினைத்துக் கொண்டிருந்தேன். ஆனால் ஈழப் பிரச்சினையில் மட்டும் துக்ளக் சோ மூன்றாம் தர மனிதனுக்கூட இருக்க வேண்டிய மனிதாபிமானமும்கூட இல்லாமலும் சிறிதும் நியாயமில்லாமலும், உணர்வேயில்லாமலும் எழுதி வருவது கண்டு அவ்வப்போது வேதனையும் அடைந்து வந்தேன். மேலும் சமீபகாலமாக துக்ளக் சோ எழுதுவதும், பேசுவதும் (அதாவது விடுதலைப் புலிகளை தன் சொந்த விரோதியைப் போல, ஒருமூன்றாம் தர பழி வாங்கும் உணர்வு கொண்டவன் எதிர்ப்பதுபோல் எதிர்த்தும், இந்திய அமைதிப்படையை ஆதரித்தும்) என் போன்ற துக்ளக் வாசகர்களை பெரிதும் வேதனைக்குள்ளாக்கிவிட்டது. விடுதலைப் புலிகள் 'சோ'வின் சாப்பாட்டில் மண்ணையும் கல்லையும் அள்ளி வைத்து விடவில்லை. தங்கள் கையிலே, ஆயுதத்தை எடுத்து விட்டார்கள், அவ்வளவுதான். அதுவும் தங்கள் மண்ணிலேயே தாங்கள் அடிமைப் படுத்தப்படுவதைப் பொறுக்க முடியாமல். விடுதலைப் புலிகள் மீதும் சிலதவறுகள் உள்ளன என்று அனைவருக்குமே தெரியும்.

மேலும் சமீப காலமாக, புதிய பத்திரிகைகளை படிக்கின்றபோது தான் துக்ளக்கும் ஒரு மட்டரகமான மூன்றாம் தர, அரைகுறையான காசு பண்ணும் பத்திரிக்கை என்று தெரிய வந்தது. ஒருசாரார் நியாயமாகவோ இல்லாவிட்டாலும் கூடவே, அவர்கள் புரட்சி என்று பண்ணி விட்டாலோ, ஆயுதமேந்திவிட்டாலோ சற்றும் சிந்திக்காமல் அவர்கள் வன்முறையாளர்களாக சித்தரித்து அவதூறு செய்வது சோவின் பழக்கமாயும் உள்ளது.

சோ, பகவத் கீதைக்கு தமிழில் உரை எழுதி எந்தப் புண்ணியமும் இல்லை. நியாய, அநியாயங்களைச் சிந்தித்து எழுதினாலே போதும். சோவிற்கு கடுகளவாவது மனிதாபிமானமும், பத்திரிகை தர்மம் என்றெல்லாம் இருந்தால் தன்னுடைய பத்திரிகையில் இதற்கு விளக்கம் அளிக்கட்டும்.

மாஜி
துக்ளக் வாசகர்கள்
காமராஜ் காளிதாஸ்
மற்றும் நண்பர்கள்
திருநெல்லிக்காவல்

ஆசிரியரும் வெளியிடுபவரும்: எஸ். மதியழகன், 21, பாலாஜிசிங் தெரு, சைதாப்பேட்டை, சென்னை-

படிப்பகம்

www.padippakam.com
R.N. 42648/85
Regd No TN MS(S) 344

சென்னை—நாய் வளர்ப்போர் சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட 'சாம்பியன்ஷிப்' நாய் தேர்வுக்கான 17வது நாய் கண்காட்சி இது. ஆண்டுதோறும் குளிர்காலத்தில் நடைபெறும் இந்நாய் கண்காட்சியில், உலகத்தில் 'தலைசிறந்த' நாய்கள் இனத்தைச் சேர்ந்த பல்வேறு நாய்கள் இடம்பெறும். போட்டியில் பங்கு கொள்ளும் நாய்களின் உடல் அழகு, உடல்கட்டு, வீர தீரம், புத்தி சாதுர்யம் ஆகியவைகளை கணக்கில் கொண்டு, அவற்றுக்கு பரிசுகள் வழங்கப்படும்.

பரிசுக்குரிய நாய்களை தேர்ந்தெடுக்க நடுவராக அழைக்கப்பட்டவர்கள் ஆஸ்திரேலியாவைச்சேர்ந்த சிப்ரா தம்பதிகள்; ஹரி சிப்ரா—திருமதி மார்கெரட்சிப்ரா—இவர்கள் சிறப்புமிக்க நாய்களை தேர்ந்தெடுப்பதில் அசாதாரணமிக்க அறிவு படைத்தவர்களாம். நாய் கண்காட்சியை வேடிக்கைப்பார்க்க வந்திருந்த பெருங்கூட்டத்தைப் பார்த்து வியந்து போன ஹரிசிப்ரா "ஆஸ்திரேலியாவில்கூட, நாய் கண்காட்சிக்கு மக்கள் இந்த அளவு ஆதரவு தெரிவிப்பதில்லை" என்று கூறி, "நாய்கள் அனைவராலும் நேசிக்கக்கூடிய ஒரு செல்லபிராணி மட்டுமல்ல, கடவுளால் தனிச் சிறப்பாக உருவாக்கப்பட்ட ஒரு ஜீவன்

நாய் என்ற வார்த்தையை திருப்பிபடித்தால் கடவுள் என்றவார்த்தை கிடைக்கும் (DOG—GOD) இந்தஜீவனுக்கு இருக்கும்நன்றிமறவாகுணம், வலிமை, உறுதி, புரிந்து கொள்ளும் தன்மை—இவைகளில் மனிதனையும் விஞ்சி நிற்கிறது என்று உணர்ச்சி ததும்ப பேசினாராம்.

இதோ, பொருள் இல்லாதவன், உடமை ஏதும் அற்றவன் என்ற ஒரே காரணத்திற்காக, இந்த



ஆட்சி அமைப்பால் குப்பையோடு குப்பையாய் நடுத்தெருவில் வீசியெறியப்பட்ட கோடான கோடி உழைக்கும் மக்களில் ஒருவரான கார்த்திக் தாஸ். தெருவோரம் இருக்கும் குப்பைகூளங்கள்தான் இவருடைய உலகம். குப்பை பொறுக்கி அதில் கிடைக்கும் வருவாயில்தான் குடும்பத்தை காப்பாற்றுகிறார். "ஆண்டவனே, எனக்கு இதைவிட ஒரு நல்லவாழ்க்கையைக் கொடு! நான் அதிகம் கேட்கவில்லை. என் குடும்பம் வாழ்வதற்குத் தேவையானதேபோதும். இரவும் பகலும் என்குழந்தைகளைப் பற்றியேநான் கவலைப்படுகிறேன். அவர்கள் எப்படி முன்னேறுவார்களோ" என வேதனையோடுகேட்கிறார் கார்த்திக் தாஸ்.

மனிதனாய் இருந்தாலும் ஏழையாய் இருப்பதால் அவனை சமூகத்திலிருந்தே விலக்கி வைத்து அவன் மீது வெறுப்பை உமிழும்முதலாளித்துவ கூட்டம். மறுபுறம் வீட்டு மிருகங்கள் காட்டு மிருகங்கள் மீதும் அன்பை பொழிந்து, அவற்றின் அறிவையும், அழகையும் போற்றி புகழ்ந்து மெய்மறந்து ரசிக்கிறது. தன்னுடைய வக்கிர புத்தியை அடிமட்ட மக்களிடமும் பரப்பி, உழைப்பாளிகளிடம்இருக்கும் மனிதநேயத்தையும் வேறறுக்க முயற்சிக்கும் இந்த காட்டுமிராண்டி கூட்டத்தை கருவறுப்பது எப்போது?

## இதுதான் இன்றைய இந்தியா




படிப்பகம்